யாழ்ப்பாணம்.

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஐப்பசி 13 | வியாழக்கிழமை | (30.10.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 315

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.



சிஹல உறுமய நடத்திய தாக்குதலின் சில காட்சிகள், மேலும் படங்கள் 2-ம் பக்கம்.

(படம்:ஜெயன்)

## கொழும்பில் பெரும் பதற்றம்

# தமிழ்-சிங்கள கலைக்கூட நிகழ்வில் சிஹல உறுமய பெரும் அட்டகாசம்

## ஆறுக்கும் மேற்பட்டோர் காயம்-நிகழ்வு தடைப்பட்டது

(கொழும்பிலிருந்து ஜெயன்)

**கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் நேற்று ஆரம்பமான சிங்கள-தமிழ் கலைக் கூடல் நிகழ்வில் சிஹல உறுமயக் கட்சியினர் மேற்கொண்ட அடிதடி-ரகளையில் பலர் காயமடைந்தனர். கலைக் கூடல் நிகழ்வும் இடை நிறுத்தப்பட்டது. தமிழ் மக்களுக்கு எதிரான கலவரத்தைத் தூண்டும் வகையில் சிஹல உறுமயக் கட்சியினர் செயற்பட்டுவருவதால் அங்கு பெரும் பதற்ற நிலை உருவாகியிருக்கிறது.**

தமிழ்-சிங்கள மக்களுக்கிடையி லான ஐக்கியத்தை வளர்க்கும் பொருட்டு ஹிரு(சூரியக் குடும்பம்) அமைப்பினரால் சிங்கள-தமிழ்க் கூடல் நிகழ்வு ஏற்பாடாகியிருந்தது.

'முகிழ்த்து மலர்வோம் நம் சோதர உறவுகளுடன்' எனும் தொனிப் பொருளில் இரண்டு தினங் கள் நடைபெறவிருந்த இந் நிகழ் வின் முதல் நாள் அமர்வுகள் நேற்றுக் காலை 10 மணிக்கு கொழும்பு புதிய நகர சபை மண்ட பத்தில் அருட் தந்தை யூட் லால் தலைமையில் ஆரம்பாமாகி நடை பெற்றுக் கொண்டிருந்தது. நிகழ் வில் வடக்குக் கிழக்குப் பகுதிக ளில் இருந்து படைப்பாளிகள் மற் றும் பத்திரிகையாளர்கள் என ஆயி ரக்கணக்கானோர் கலந்துகொண் டிருந்தனர். இந் நிகழ்வில் கலந்து கொண்ட ஆர்வலர்கள் மத்தியில் சிஹல உறுமயக் கட்சியினரும், அவர்களது ஆதரவாளர்களும், பிக்கு களும் ஆங்காங்கே பிரசன்னமாகி யிருந்தனர்.

இந்நிகழ்வின் இடைநடுவில், முற்பகல் 11.15 மணியளவில் அர ங்கத்தில் இருந்த சிஹல உறுமயக் கட்சியைச் சார்ந்தவர்கள் நிகழ்வை இடை நிறுத்துமாறு கோரி கோஷங் களை எழுப்பிய வண்ணம் பெரும் ரகளையில் ஈடுபட்டனர்.

'புலியின் நிகழ்வு, புலியின் நிகழ்வு' எனக் கூக்குரல் இட்டபடி நிகழ்வைச் சீர்குலைக்கும் நோக்கு டன் ஆற்றுகை மேடையை நோக்கி விரைந்தனர்.

இதற்கிடையில் நிகழ்வின் ஏற்பாட் டுக்குழுவினரான ஹிரு அமைப்பி னர் விரைந்து செயற்பட்டு சிஹல உறுமயக் கட்சி அங்கத்தவர்கள், மற்றும் ஆதரவாளர்கள் உள்ளிட்ட 10பேரை அரங்கத்தில் இருந்து வெளியே இழுத்துச் சென்றனர். இதனால் அரங்கத்தில் பெரும் பதற் றமும், அச்சமான சூழ்நிலையும் உருவானது. இருந்தபோது நிகழ்வு சலசலப்புக்களின் மத்தியில் நடை பெற்றுக்கொண்டிருந்தது.

இதற்கிடையில் அரங்கத்திற்கு வெளியே பொல்லுகள், தடிகள், கொட்டன்கள், சைக்கிள் செயின் என்பவற்றுடன் 60க்கும் மேற்பட்ட சிஹல உறுமயக் கட்சியின் ஆதர வாளர்கள் தாக்குதலுக்குத் தயா ராக இருந்தனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட பௌத்த பிக்கு ஒருவர் அரங்கத்

(10ம் பக்கம் பார்க்க)

### சிஹல உறுமய மறுப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற தமிழ்-சிங்கள கலைக் கூடல் நிகழ்வில் சிஹல உறுமய உறுப்பினர்கள் பலர் பங்கு கொண்டிருந்தாலும் அவர்கள் வன்முறையில் ஈடுபட வில்லையென சிஹல உறுமயக் கட்சியின் தலைவர் திலக் கருணா ரத்ன தெரிவித்துள்ளார். (ந)

### கையடக்கத் தொலைபேசி பாவனை

## உள்வரும் அழைப்புக்களுக்கு 2004 முதல் கட்டணம் இல்லை

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசியில் உள்வரும் அழைப்புக்களுக்கு அடுத்த ஆண்டு தொடக்கம் கட் டணம் அறவிடப்பட மாட்டாது என மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் தெரி வித்துள்ளார்.

உள்வரும் அழைப்புக்களுக்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது என எடுக்கப்பட்ட தீர்மானம் பல்வேறு காரணங்களினால் தாமதமாகியுள் ளது எனவும், ஜனவரி 1-ம் திகதி

(10ம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பிக்கு தமிழர்களின் இரத்தம் தேவைப்படுகிறது

### பேராசிரியர் சுசரித ஹம்லத் கலைக் கூட நிகழ்வில் உரை

(கொழும்பிலிருந்து நமது செய்தியாளர் ஜெயன்)

தமிழ் மக்கள் மீது திணிக்கப்படு கின்ற அனைத்து அடக்கு முறைகள், வன்முறைகளுக்கு எதிராக இறுதி மூச்சுவரை பாடுபடுவேன்.

இவ்வாறு சிங்களப் பேராசிரியர் சுசரித ஹம்லத் சூளுரைத்துள்ளார்.

கொழும்பு புதிய நகர சபை மண் டபத்தில் நேற்று ஆரம்பமான சிங் கள-தமிழ் கலைக் கூட நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போதே அவர், இவ்வாறு குறிப்பிட்டார்.

நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இரு தசாப்தங்களுக்கு மேலாகத்

(10ம் பக்கம் பார்க்க)

### வெளியுறவு அமைச்சு அவசர அழைப்பு

## கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலிவ்சன் நோர்வே விரைவு!

(நமது நிருபர்)

**இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றிட்ஜ்வே ரெலிவ்சன் மீது நோர்வேயின் உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை மேற்கொள்ளப்போவதாக நேற்றிரவு பிந்திக்கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.**

இலங்கை யுத்த நிறுத்தக் கண் காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றிட்வேஜ் ரெலிவ்சன் நோர்வேக்குப் புறப்பட்டுச் சென்று ள்ளார்.நோர்வே வெளிவிவகார அமைச்சின் விசேட அழைப்பை ஏற்று நேற்று முற்பகல் 11.30மணி க்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து றிட்வேஜ் ரெலிவ்சன் புறப்பட்டுச் சென்றார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் பக்கச்சார்பாக நடந்துகொள்கின்றார் என்று கூறி அவரை உடனடியாக நோர்வே திருப்பி அழைக்க வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நோர்வேப் பிரதமருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஜனாதிபதியின் இக் கோரிக்கை

(10ம் பக்கம் பார்க்க)

## வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் (வ-து)

## பதவி வெற்றிடங்கள்

கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து (இருபாலாரும்) உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை ரூபா 10/- செலுத்தி சமாசத்தில் பெற்றுக்கொள்ளலாம், விண்ணப்பங்கள் தலைவர், வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், 52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். என முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிட்டு பதிவு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.விண்ணப்ப முடிவு திகதி **12.11.2003** ஆகும். சமாசத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

**1. பொது முகாமையாளர் பதவி 101/07 (நிரந்தரம்)**

**1. சம்பள அளவுத் திட்டம்:-**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 31/99க்கு அமைய

**5500 - 8200**

**130X10 - 140X10**

**2. தகைமைகள்:-**

அ)கூட்டுறவுப் பணியாளர் 8-வது சம்பளத்திட்டத்திலான பதவியில் முகாமைமட்ட/மேற்பார்வை மட்ட 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 9வது சம்பளத்திட்ட பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ)அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு பணியாளர் உயர்தரப்பத்திரம்/ க.பொ.த. உயர்தரம் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 8 வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

**2. அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் 201/10 (நிரந்தரம்)**

**1. சம்பள அளவுத்திட்டம்:-**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கை இல 31/99க்கு அமைய

**4750 - 6850**

**100X10 - 110X10**

**2. தகைமைகள்:-**

அ)கூட்டுறவுப் பணியாளர் 11வது சம்பளத்திட்டத்தில் அங்கத்தவர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தராக 2வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12வது சம்பளத்திட்டத்தில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது.

ஆ)அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்துடன் கூடிய கூட்டுறவு சமூக அபிவிருத்தி தொடர்பான பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மேற்குறித்த இரு பதவிகளுக்குமான வயதெல்லை 18 தொடக்கம் 45 வரையாகும். தற்போது கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிபவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன், கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களின் விண்ணப்பங்கள் யாவும் தாம் பணிபுரியும் சங்கங்கள்/ கொத்தணிகள் ஊடாகவே அனுப்பி வைத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை, சேவைத் தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**கி.தவராசா**
**தலைவர்.**
**வ.தெ.ப.பொ.கூ.ச.சமாசம்.**

[C/6776]


## ரமழான் சிந்தனை

நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன.

1. அவன் நோன்பு திறக்கும் பொழுது மகிழ்ச்சியடைவான்.
2. கியாமத்நாளில் தன் ரப்பைச் சந்திக்கும் பொழுது தன் நோன்பைக் கொண்டு மகிழ்ச்சியடைவான். (புஹாஹி, முஸ்லிம்)

‘‘எனவே நோன்பு நோற்பதின் மூலமாக எங்கள் மனங்களைச் சுத்தப்படுத்த வேண்டும். இரவு நேரத் தொழுகைகளிலே (தராவீஹ்) திருக்குர்ஆன் ஓதுவதன் மூலமாக எங்கள் உயிர்களுக்கு சுகமளிக்க வேண்டும். மரணத்திற்குப்பின் உயிர்பெற்று வருவதை எண்ணிப்பார்க்காமல் மன இச்சைக்கு மாற்றமாக நடக்காமல் வணக்க வழபாடுகளில் சிரமத்தை சகிக்காமல் கீழ்த்தரமான ஆசாபாசங்களுக்கு அடிமைப்பட்டு உல்லாச வாழ்க்கையிலே இருப்பவர்கள் போன்று ஆகிவிடக்கூடாது. யுக முடிவுக்காக வானம் பிளந்து அது சிவப்புத்தோல் போன்று ஆகிவிடும் நாளை நாம் நினைத்துப் பார்த்து செயற்பட வேண்டும். நாம் சிந்தனை செய்ய வேண்டும். சென்ற வருடம் எம்முடன் இருந்தவர்கள் இன்று எம்மை விட்டு மறுவுலகப் பயணத்தினை மேற்கொண்டு விட்டனர். இவ்வருடம் புனிதமிகு ரமழானை அடைந்திருக்கின்றோம். இனிவரும் ரமழானில் நாம் உயிருடன் வாழ்வோமா என்று எவராலும் திட்டவட்டமாக சொல்ல முடியாது. எனவே எம்மை வந்தடைந்திருக்கும் ரமழானை வரவேற்று அதன் மகத்துவம் அறிந்து எமது இபாத்ததுக்களை அமைத்துக்கொள்வோமாக. எல்லாம் வல்ல இறைவன் இந்த ரமழானை சங்கைப்படுத்தக் கூடிய நல்லவர்கள் பட்டியலில் எம் அனைவரையும் இணைப்பானாக. வஆகிறுத.்.வானா அனில்ஹம்துலில்லாஹிறப்பில் ஆலமீன்.

**தகவல்: மக்கள் பணிமனை**

## ஜனாதிபதியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துமாறு கோரிக்கை

வடக்கு-கிழக்கு மாகாண இணைப்புக் குறித்த சர்வஜன வாக்கெடுப்பினை எதிர்வரும் நவம்பர் மாதம் 17ம் திகதி நடத்துவதா? அல்லது அதனை மேலும் ஒரு வருடத்திற்கு ஒத்திவைப்பதா என்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரைவில் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டுமென தேர்தல் ஆணையாளர் தயானந்தா திசநாயக்கா கோரியுள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாட்டினை விரைவில் தெரிவிப்பதாக அவரின் செயலாளர் உறுதியளித்துள்ள போதிலும் இதுவரை இது விடயம் குறித்து தேர்தல் திணைக்களத்திற்கு அறிவிக்கவில்லை. அத்துடன் வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்படவில்லை.

1987ம் ஆண்டு இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் வட-கிழக்கு மாகாணம் இணைக்கப்பட்டது. இம் மாகாண இணைப்புத் தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

ஆனால் கடந்த கால ஜனாதிபதிகள் இதனை வருடாதோறும் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒத்திவைத்து வந்துள்ளனர்.

அந்த வகையில் ஜனாதிபதி ச[illegible]திரி கா குமாரதுங்கவும் கடந்[illegible] வருடம் வரை வட-கிழக்கு மாகாண இணைப்புத் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பினை ஒத்திவைத்தே வந்துள்ளார் என்றார்.

இதேவேளை, சர்வஜன வாக்கெடுப்பு ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்டு எதிர்வரும் 17ம் திகதியுடன் அதன் கால எல்லை முடிவடைகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

# சிங்கள-தமிழ் கலைக் கூடல் நிகழ்வில் ஏற்பட்ட களேபரத்தின் சில காட்சிகள்















# பலஸ்தீன அதிபர்-பிரதமருக்கிடையில் கருத்து முரண்பாடு

## புதிய அமைச்சரவை அமைப்பதில் சிக்கல்

(கெய்ரோ)

பலஸ்தீன தீவிரவாதிகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் யுத்த நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளச் செய்வதற்கு பலஸ்தீன பிரதமர் அஹமட் குரேய் தீவிர முயற்சி எடுத்துவரும் அதேவேளை பிரதமருக்கும் அதிபர் யசீர் அரபாத்திற்குமிடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றி இருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

பலஸ்தீன அவசரகால சபையில் அமைச்சரவையின் 30 நாள் கால எல்லை அடுத்தமாதம் 4ஆம் திகதி முடிவடைய இருப்பதாக உத்தேசித்து நிரந்தர அமைச்சரவை ஒன்றை உடனடியாக அமைக்கும் படி பலஸ்தீன பிரதமர் அஹமட் குரேயிடம் ஜனாதிபதி அரபாத் கோரிக்கைவிடுத்துள்ளார்.

பிரதம மத்திரி அஹமட்குரேய் கருத்து வெளியிடுகையில் இஸ்ரேலியர்கள் மீதான தாக்குதலை நிறுத்தவும் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கவும் பலஸ்தீன தீவிரவாதக் குழுக்கள் உடன்பாடு தெரிவித்துள்ளன என்று கூறியுள்ளார்.

பலஸ்தீன விடுதலை இயக்கம் கமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் குழுவினருக்கு பேச்சுவார்த்தைகளுக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

பலஸ்தீன பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாடு சம்பந்தமாக பிரதமத்திரிக்கும் ஜனாதிபதிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட் ள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

நிரத்தர அமைச்சரவை ஒன்றை தாம் அமைப்பதற்கு முன்னர் பாதுகாப்புப்படையின் கட்டுப்பாடு பற்றிய விவகாரத்துக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று பிரதமர் கூறியுள்ளார்.

இதற்கிடையில் ஜனாதிபதி அரபாத்தும், பதாஸ் மத்திய குழுவினரும் புதியதொரு அமைச்சரவை அமைக்கும்படி அபு அலாவைக் கேட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக இரு பிரமுகர்கள் பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சமாதான பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் எனக் கோரும் வகையில் 1இலட்சம் இஸ்ரேலியர்களிடம் இருந்து அவர்கள் கையெழுத்துக்களை திரட்டியுள்ளனர்.

ஐ.நா. செயலாளர் நாயகம் கோபிஅனான் இந்த நடவடிக்கைக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.(பி-9)

## அவுஸ்திரேலிய விஞ்ஞானிகளின் புதிய கண்டுபிடிப்பு

(வியன்னா)

அவுஸ்திரேலிய விஞ்ஞானிகள் பக்ரீறியாக்களைக் கொண்டு பல வேறு உற்பத்திகளை மேற் கொள்ளவுள்ளனர்.

விஷங்களை அகற்றவும் பாவனைக்குதவாத பொருட்களை மீள்பாவனை செய்யவும் இந்த பக்ரீறியாக்களைப் பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ளப்படும் இந்த உயிரியல் தொழில்நுட்ப உற்பத்திகளின் மூலம் வருடம் ஒன்றுக்கு 5பில்லியன் ரூபாவிற்கு மேல் வருமானம் ஈட்ட முடியுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வகை தொழில் நுட்பத்தில் அவுஸ்திரேலியா முன்னிலை வகிப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (பி-9)

## கலிபோர்னிய காட்டுத்தீயில் இதுவரை 13பேர் பலி
### 15ஆயிரம் கட்டடங்கள் சேதம்

(நியூயோர்க்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் ஏற்பட்ட காட்டுத் தீ தொடர்ந்து பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 15ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் சேதம் அடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த காட்டுத் தீயின் காரணமாக 18 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

கலிபோர்னியக் காடுகளில் ஏற்பட்ட இந்தக் காட்டுத் தீ மொனிரீனோ எல்லை வரை பரவியுள்ளது.

நிலவும் வெப்பக்கால நிலையின் காரணமாகவும், காற்றின் வேகம் காரணமாகவும் தீயைக்கட்டுப்படுத்து வதில் பல்வேறு சிரமங்கள் காணப்படுவதாக தீயணைப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள வீரர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 100 ஆண்டுகாலத்தில் இடம்பெற்ற மிக மோசமான காட்டுத்தீச் சம்பவம் இதுவென குறிப்பிடப்படுகின்றது. (பி-9)

## இந்தியாவின் அமைதித் திட்டம் பாக்.பேச்சாளர் கருத்துக்கு இந்தியாவில் அதிருப்தி

(புதுடில்லி)

இந்தியாவின் அமைதித் திட்டம் குறித்து பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்த கருத்துக் குறித்து இந்தியா விசனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் அமைதித் திட்டத்துக்கு கடுமையான பதில் அளிக்கப்படுமென பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மசூர் ஹான் தெரிவித்துள்ளார்.

இவரின் பதில் இருநாடுகளுக்கும இடையிலான அமைதி முயற்சியைச சீர்குலைக்கும் தன்மை கொண்டதாக உள்ளதென இந்தியா கூறியுள்ளது.

அத்துடன் பாகிஸ்தானுடன் அமைதியை நிலைநாட்ட இந்தியா மேற்கொண்டுள்ள கடைசி முயற்சி இதுவென படைத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்த கருத்து போர் வெறியனின் பேச்சென மசூர் ஹான் வர்ணித்துள்ளார்.

குரியஸ் மாநாட்டின் தலைமைகளுடன், துணைப்பிரதமர் அத்வானி பேச்சுவார்தை நடத்துவதால் கஷ்மீரின பிரச்சினையைத் தீர்க்க முடியாது என மசூர்ஹான் தொவித்திருப்பதே ஜம்முகஷ்மீரில் அமைதியை ஏற்படுத்தக் கூடாது என்ற நோக்கில் செயற்படும் பாகிஸ்தானின் எண்ணத்தை பிரதிபலிப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது. (பி-9)

## ஈரானின் அணு ஆயுதத் திட்டம் யுரேனிய பாவனைபற்றிய ஐ.நா சோதனைக்கு அனுமதி

(தெஹறான்)

அணு ஆயுதத் திட்டத்தை முன்னெடுக்கும் வகையில் யுரேனியம் மூலப்பொருளாக பயன்படுத்தப்படுகிறதா? என்பதை பரிசோதிக்கும் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளுக்கு ஈரான் அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வருட முற்பகுதியில் ஈரான் ஆயுதங்களை உற்பத்தி செய்யும் மூலப் பொருளாக யுரேனியத்தைப் பயன்படுத்துவதாகக் கண்டுபிடிக்கப் பட்டதையடுத்து அங்கு சோதனைகளை நடத்த வேண்டுமென ஐக்கிய நாடுகள் தெரிவித்திருந்தது. அத்துடன், ஈரானிடம் அணுவாயுதத் திட்டம இல்லையென்பதை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக நிரூபிக்க வேண்டும் என்ற காலக் கெடுவையும் ஐ.நா விதித்திருந்தது.

இவ்வாறான நிர்பந்தங்களுக்கும், நிபந்தனைகளுக்கும் மத்தியில் தனது நாட்டில் ஆயுத சோதனைகளை நடத்த முடியுமென ஈரான் தெரிவித்துள்ளது.

மேலும் தனது அணுஆயுத திட்டம் யாவும் மின்உற்பத்தியை நிறைவேற்றுவதற்காகவே பயன்படுத்தப்படுவதாக ஈரான் கூறியுள்ளது.

அத்துடன், யுரேனியம் உற்பத்தி செய்வதற்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களில் யுரேனியம் காணப்பட்டதைஅடிப்படையாக வைத்தே தமது நாட்டில் அணுவாயுத திட்டம் இருப்பதாக கூறப்படுவதை ஈரான் வன்மையாக கண்டித்துள்ளது.

இந்நிலையில் யுரேனியம் தயாரிக்கப்படும் ஆயிரக்கணக்கான இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களையே ஐ.நா சோதகர்கள் பரிசீலிக்கவுள்ளனர். (பி-9)

## நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகள் தாக்கி 9 பேர் உயிரிழந்தனர்

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோ தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் 50 தீவிரவாதிகள் கலந்து கொண்டதாக கூறப்படுகிறது.

இத்தாக்குத்லில் 6 காவல்துறையினரும், ஒரு படைச் சிப்பாய் உட்பட இரு பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த 8 வருடங்களாக நேபாளத்தில் இடம்பெற்றுவரும் இந்த மோதல்களில் 8 ஆயிரம் பேர்வரையில் உயிரிழந்துள்ளனர். (பி-9)

## சீன சுரங்க விபத்தில் 13பேர் பரிதாபச் சாவு

(பெய்ஜிங்)

சீனாவின் தென்மேற்கு நகரம் ஒன்றில் இடம்பெற்ற நிலக்கரி சுரங்க விபத்தில் 13சுரங்கத் தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளதுடன் ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இப் பிராத்தியத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சுரங்க விபத்தில் 6பேர் காணாமற் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்தில் பலர் எரிகாயக்களாலும் நச்சுவாயுவின் காரணமாகவும் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் முதல் 9 மாதங்களில் மாத்திரம் சுரங்க விபத்துக்களால் 4620 பேர் உயிரிழந்துள்ளதாகவும் ரொயிட்டர் செய்தி வெளியிட் டுள்ளது. (பி-9)

## பயங்கரவாதிகள் 17பேர் சரணடைய விருப்பம்

(புதுடில்லி)

ஜம்முகாஷ்மீரில் பூஞ் மற்றும் ரயோரி மாவட்டங்களில் பீர்ப் பஞ்சால் பிரிவில் செயற்பட்டுவரும் 17 பயங்கரவாதிகள் பாதுகாவற் படையினரிடம் நேற்று சரணடைய முடிவு செய்திருந்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் ஹிஸ்புல்லா முஜாகுதீன் மற்றும் லக்ஷரி இதொய்வா அமைப்பைச் சேர்த்தவர்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இராணுவக் குடியிருப்பு வளாகத்தில் மறைந்து கொண்டிருந்த ஒரு பயங்கரவாதி நேற்று அதிகாலை சுட்டுக்கொல்லப் பட்டார்.

நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் திடீர் என்று உள்ளே நுழைந்த இந்தத் தீவிரவாதி இரண்டு குழந்தைகளைக் கொன்று வேறு 8பேரை காயப்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.(பி-9)

## சிம்பாவே அதிபருக்கு திடீர் சுகவீனம

(லண்டன்)

சிம்பாவே அதிபர் திடீரென மயக்கமுற்று விழுந்ததை அடுத்து அவசர சிகிச்சைக்காக தென்னாபிரிக்காவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிறு இரவு நோய் வாய்பட்ட அதிபர் முகாபே இரவு முழுவதும் வாந்தி எடுத்ததாக அதிகாரிகள் கூறினர். 79 வயதான முகாபே இல்லாத நிலையில் சிம்பாவே அரசியலில் பெரும் பிரச்சனைகள் தோன்றும் என்று கூறப்படுகின்றது. (பி)

## உலக தரிசனம்

## தீவிரவாதிகள் வீசிய குண்டினால் முப்பத்தைந்து பேர் காயமுற்றனர்

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் உள்ள தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்துக்குள் தீவிரவாதிகள் வீசிய கைக்குண்டு ஒன்று வெடித்ததில் 35 பேர் காயமடைந்தனர்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இயங்கி வரும் இந்த தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தில் தமது தொலைபேசி கட்டணங்களை செலுத்துவதற்காக காத்து நின்ற பொது மக்களே பெருமளவு காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, புனித ரமழான் மாதத்தின் போது காஷ்மீரில் கடுமையான தாக்குதல்களை நடத்தப்போவதாக பாகிஸ்தானில் நிலைகொண்டுள்ள தீவிரவாதக் குழு ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ள நிலையிலேயே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (பி-9)

## மொரொக்கோவுக்கான உதவிகள் கணிசமான அளவு அதிகரிக்க அமெரிக்கா ஆலோசனை

(வாஷிங்டன்)

முஸ்லிம் நாடுகளில் தனது பிரதான நேசநாடாகக் கருதப்படும் மொரொக்கோவுக்கு வழங்கப்படும் நிதி உதவிகளை குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பதற்கு அமெரிக்கா உறுதி வழங்கியுள்ளது.

மொரொக்கோவிற்கு வழங்கப் படும் இராணுவரீதியிலான உதவிகளை 4 மடங்காகவும் இராணுவ உதவிகளை 2 மடங்காகவும் அடுத்த வருடம் முதல் அமெரிக்கா அதிகாரிக்கும் என பிரதி ராஜாங்க அமைச்சர் வில்லியம் வேன்ஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் மொரொக்கோவில் பொருளாதரம் கல்வி அரசியல் வாய்ப்புக்கள் ஆகியவற்றுக்கென அடுத்த வருடம் முதல் 40 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு அமெரிக்கா ஆலோசித்து வருகிறது.

இந்த நிதியில் ஒருபகுதி பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் ஒதுக்கப்படுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது. (பி-9)

## 3 வீரர்களை விண்வெளி அனுப்ப சீனா திட்டம்

(பெய்ஜிங்)

சீனா தனது நாட்டைச்சேர்ந்த மூவரை விண்வெளிக்கு அனுப்பி சாதனை புரிய திட்டமிட்டுள்ளது.

இம் மாதம் 15ஆம், 16ம் திகதிகளில் தனது நாட்டைச்சேர்ந்த ஒருவரை முதல் தடவையாக விண்வெளிக்கு அனுப்பியதன் மூலமாக பெருமகிழ்ச்சியும் உற்சாகத்தையும் கொண்டு உள்ள நிலையிலேயே அடுத்தமுறை மூன்று சீனர்களை விண்வெளிக்கு அனுப்பத்திட்டமிடப்பட்டுள்ளது.

பெரும்பாலும் அடுத்த 2 வருடங்களில் சீனாவில் விண்வெளி வீரர்கள் மூவர் விண்வெளிக்கு அனுப்பப்படுவர் என சீனாவின் செய்திச் சேவை தெரிவித்துள்ளது. (பி-9)

# செய்தித் துளிகள்

## சுயதொழில் முயற்சி உதவித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதியுதவியுடன், யாழ்.மாவட்டத்தில் உள்ள விவசாயம் அல்லாத சுயதொழில் முயற்சியில் ஈடுபடுவோருக்கான உதவித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் முதல்கட்ட நடவடிக்கையாக 4 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அக்கிராமங்களில் உள்ள பயனாளிகளை இனங்காணும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, கல்வியங்காடு, நாவற்குழி மேற்கு, சுழிபுரம் ஆகிய 4கிராமங்களே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளன. (உ-4)

## மூவிமெண்டோ உதவி

(பன்னாலை)

ஏழாலை வடக்குப் பகுதியிலுள்ள தெரிவு செய்யப்பட்ட விவசாயக் குடும்பங்களுக்கு மூவிமெண்டோ நிறுவனம் அண்மையில் உதவு பொருட்களை வழங்கியுள்ளது.

மேற்படி பகுதியிலுள்ள விவசாய சம்மேளனத்திற்கு ஓர் நீரிறைக்கும் இயந்திரமும், 160 குடும்பங்களுக்கு மண்வெட்டிகளும், 300ற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு தென்னம் நாற்றுகளும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-32)

## பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை வைத்தியசாலை

(கொழும்பு)

ஜேர்மன் நாட்டின் நிதியுதவியுடன் இலங்கையின் ஜா-எல பகுதியில் முதன்முதலாக எரிகாயங்களுக்கான பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை வைத்தியசாலையொன்று அமைக்கப்படவுள்ளது.

இவ் வைத்தியசாலையை அமைக்கவென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜா-எல பகுதியில் 5 ஏக்கர் நிலத்தைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதுவரை காலமும் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையானது வெவ்வேறு வைத்தியசாலைகளில் குறிப்பிட்ட நாளில் மாத்திரமே வெளிநாட்டு மருத்துவர்களால் வழங்கப்பட்டு வந்தது.

இச் சிரமங்களை நீக்கும் முகமாகவே, ஜா-எல பகுதியில் எரிகாயங்களுக்கான சத்திரசிகிச்சை வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

## காலபோக நெற் செய்கை

(பளை)

வடமராட்சி கிழக்கு அம்பன் குடத்தனைப் பகுதிகளில் காலபோக நெற்செய்கை நடவடிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இப்பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் பண்படுத்தப்பட்டு விதைப்பு நடவடிக்கைகள் சுறுசுறுப்பாக தற்போது நடைபெற்று வருகின்றன. (பி-97)

## சித்தசுவாதீனமற்ற பெண் வைத்தியசாலைப் பராமரிப்பில்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறைப் பொலிஸார் சுமார் 48 வயது மதிக்கத்தக்க சித்தசுவாதீனமற்ற பெண் ஒருவரை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

ஊரிக்காட்டிலுள்ள வீடொன்றில் புகுந்து இப்பெண் அட்டகாசம் புரிந்தமையால் அவ்வீட்டு உரிமையாளர் இவரை வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தார்.

இவரின் உறவினர்களை தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள் அறிவித்துள்ளார். (உ-52)

## பாம்புக்கடி அதிகரிப்பு

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புக்கடிக்குள்ளானோர் தொகை அதிகரித்து வருவதாக தெரியவந்துள்ளது.

கடந்த வாரத்தில் மட்டும் 20க்கும் மேற்பட்டோர் பாம்புக்கடிக்கு இலக்காகி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதுடன், சிலர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைககப்பட்டுள்ளதாக வைத்திய கலாநிதி வா.யூ.டி. ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். (பி-35)

## வட்டியில்லாக் கடன்

(கந்தரோடை)

வலிகாமம் வடக்கு சமுர்த்தி வங்கிச் சங்கம் அப்பகுதியிலுள்ள தொழில்செய்யும் சமுர்த்தித் திட்டப் பயனாளிகளுக்கு வட்டியில்லாத வியாபாரக் கடன்களை வழங்கவுள்ளது.

தள்ளுவண்டி மூலம் வியாபாரம் மேற்கொள்பவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும், வீட்டுடன் இணைந்த சிறு கடைகளை நடாத்தும் சில்லறை வியாபாரிகளுக்கு தலா 10ஆயிரம் ரூபாவும் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படவுள்ளதாக வலிகாமம் வடக்கு சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர் அ.பரமேஸ்வரி தெரிவித்துள்ளார். (உ-103)

## மிதிவெடியில்சிக்கி சிறுவர்க்ள் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெல்லாவெளியில் மிதிவெடியில் சிக்சி ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளார்கள்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அ.டினோசன் (வயது 8) என்ற சிறுவன் கையை இழந்துள்ளார் என்றும் சகோதரி அ.டிலோஜினி என்பவர் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-60,10)

## வழக்கு விசாரணை

(கொழும்பு)

மனித உரிமை ஆர்வலர் அன்ரனி இம்மானுவல் பெர்னாண்டோ தாக்கல் செய்த வழக்கு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மேற்படி ஆர்வலர் தாக்கல் செய்த மனுவில், தான் சிறை வைக்கப்பட்டிருந்த காலத்தில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டிற்காக சிறை வைக்கப்பட்டிருந்த இவர், மனித உரிமைகள் மீறப்பட்டதால் ஏற்பட்ட இழப்புக்கு 10 இலட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கவேண்டும் எனவும் அம்மனு மூலம் கோரியுள்ளார். (தி-60)

## பொலிஸார் மீது திருட்டுக் குற்றம்

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றில் அண்மையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சம்பந்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பொலிஸாரிடம் இருந்து அண்மையில் திருட்டுப்போன 3 மோட்டார் சைக்கிள்களையும் அக்கரைப்பறறுப் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன், சம்பந்தப்பட்ட பொலிஸாரையும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்தனர். (உ-60,10)

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக் கலைப்பீடப் பரீட்சைகள் அடுத்த மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகி 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. (உ-18)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவைக் கந்தன் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.30 மணிக்கு யா/இணுவில் இந்துக் கல்லூரியில் சி.நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ)

## ஊழியர் போராட்டம் இடை நிறுத்தப்பட்டது

(கொழும்பு)

கண்டி மாவட்ட வைத்தியசாலை ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று முன்தினம் முதல் இடை நிறுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் இந்த மருத்துவமனையில் பணியாற்றும் வைத்தியர் ஒருவர், சிற்றூழியர்களை அச்சுறுத்தியதை அடுத்து வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சுகாதார சேவைப் பணிப்பாளர் அறிவித்ததை அடுத்து, இத் தொழில் சங்க நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பந்தப்பட்ட வைத்தியருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்படும் என சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் நிஹால் ஜெயதிலக தெரிவித்துள்ளார். (தி-60)

## சுற்றிவளைப்பில் 58 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் நடத்தப்பட்ட திடீர்ச் சுற்றிவளைப்பின் போது சந்தேகத்தின் பேரில் 58 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 6.00 மணி வரை நடாத்தப்பட்ட 24 மணி நேரத் தேடுதலின் போது, 133 வீதித் தடைகளும், 63 ரோந்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. (தி-61)

## கருத்தரங்கு

(பன்னாலை)

பன்னாலைப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களின் நலன் கருதி, அவர்களுக்கு மிதிவெடி அபாய விழிப்புணர்வு தொடர்பான கருத்தரங்கொன்று யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வோதயம் அமைப்பினால் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு பன்னாலை கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது. (உ-32)

## 83 வது "வெளிச்சம்" வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடாக "வெளிச்சம்" கலை, இலக்கிய சமூக சஞ்சிகையின் 83வது இதழ் வெளிவந்திருக்கிறது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, புதுவை இரத்தினதுரை, யுகசேனன், கோகுலராகவன், துன்னாலை செல்வம், சோ.சி.கலைக்கதிர், நெடுந்தீவு மகேஷ், துவாரகன், ஆத்மரிஷி, சிதம்பரநாதன் இரமேஷ், இயல்வாணன், யாத்திரீகன் ஆகியோரின் கவிதைகளும், ந.மயூரரூபன், சி.கதிர்காமநாதன், தாட்சாயணி, சாந்தினி வரதராஜன், சு.மகேந்திரன், ஆதித்தநிலா, சி.மாதுளா ஆகியோரின் சிறுகதைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

இவற்றுடன், முல்லை யேசுதாசன், மலைமகள், தே.தேவானந்த், ஞாபகன் ஆகியோரின் கட்டுரைகளும், சோ.பத்மநாதனின் மொழி பெயர்ப்புக் கவிதை மற்றும் தூது, அஞ்சலி என்பனவும் இடம்பெற்றுள்ளன.

நவம்பர் மாதத்திலிருந்து வெளிச்சம் சஞ்சிகைக்கு தனியான இணையத்தளமொன்று உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதன் முகவரி விரைவில் அறிவிக்கப்படுமென விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் தகவல் வெளியிட்டுள்ளது (உ)

# புதிய பொலிஸ்மா அதிபர் அடுத்தவாரம் நியமனம்

(கொழும்பு)

புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் அடுத்த வாரமளவில் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் ஆணைக்குழு 4சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களின் பெயர்களை சிபார்சு செய்து அரசியல் அமைப்புச் சபைக்கு அனுப்பியுள்ளதாகவும் அரசியல் அமைப்புச் சபை இச்சிபார்சினை உடன் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் புதிய பொலிஸ்மா அதிபரின் பெயரை வெளியிடுவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-10)

# மின்சக்தி தொழிற்சாலை ஏறாவூரில் அமைக்கப்படும்

(கொழும்பு)

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் குப்பை கூழங்களில் இருந்து மின்சக்தியை உருவாக்கும் தொழிற்சாலை ஒன்று மட்டக்களப்பு ஏறாவூரில் நிறுவப்படவுள்ளது.

வீடமைப்புப் பிரதி அமைச்சர் வசீர் சேகுதாவுத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஜப்பானிய அரசாங்கம் இந் தத் திட்டத்துக்கு 80 இலட்சம் ரூபா நிதியினை வழங்கவுள்ளது.

இது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜபபானியத் தூதரகத்தில் நடைபெறறது.

இக் கலந்துரையாடலில் வீடமைப்புப் பிரதி அமைச்சர் வசீர் சேகுதாவுத், ஏறாவூர் நகர பிரதேச சபைத் தலைவர் ஆகியோருடன் ஜப்பானிய உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திலேயே 80 இலட்சம் ரூபா நிதியை வழங்குவதற்கான இணக்கப்பாடு காணப்பட்டது.

இத் தொழிற்சாலையை அமைப்பதறகான ஒப்பந்தத்தில் பிரதேச சபைத் தலைவரும், ஜப்பானிய தூதரகத்தின் இரண்டாவது செயலாளரும் கைச்சாத்திட்டுள்ளனர். (தி-60)






வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திச் சங்கங்களின் கொத் தணியின் ஏற்பாட்டில் அண்மைய'ல் முள்பள்ளிச் சிறார்கள்களுக்கு இலவச சீருடை வழங்கப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டப்பணிப்பாளர் ஜெயராஜா, இந்து கலாசார அமைச்சின் மேலதிகச் செயலாளர் து. வைத்திலிங்கம் ஆகியோர் சிறார்களுக்கு சீருடைகளை வழங்குகின்றனர்.

## நூலக வாரப்போட்டி முடிவுகள்

(கந்தரோடை)

சர்வதேச நூலக வாரத்தை ஒட்டி வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அவற்றின் விபரம் வருமாறு:

**தனிநபர் வினா-விடைப்போட்டி**

1ம்இடம்- பா.அஜந்தன்- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
2ம் இடம்- சி. கோபிராஜ்- சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.
3ம்இடம்- இ.ஜெகபரன், கு.மகிந்தன்- மல்லாகம் மகாவித்தி.
4ம் இடம்- க.ரதிகரன்- இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி.

**சுவரொட்டி வரைதல் போட்டி**

1ம்இடம்- ந. பிரதீப்- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
2ம்இடம்- கா.சுரேஷ்கண்ணா-இணுவில் மத்திய கல்லூரி.
3ம் இடம்- சே.கஜந்தன்- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
3ம் இடம் -சி. ரெஜிபன்-இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி
4ம்இடம்- செ.டென்சிகா- உடுவில் மான்ஸ் மகாவித்தி.

**சிறந்த நூலகப் பாவனை**

1ம்இடம்-கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.
2ம்இடம்- வட்டு. மத்திய கல்லூரி.
3ம்இடம்- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.


**சிறந்த நூல் சேகரிப்பு**

1மஇடம்- இணுவில் மத்திய கல்லூரி.

**சிறந்த ஆசிரிய நூலகர்**

1ம்இடம்- திருமதி கே. லோகநாதன்- வட்டு. மத்திய கல்லூரி. (உ-103)

## கதிகலங்கும் உலகப் பொலிஸ்காரன்....




## குடாநாட்டு மக்கள் தொகையில் காற்பங்கினர் முதியோர்

### 2030இல் இந்த நிலை ஏற்படுமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வசிப்பவர்களில காற்பங்கினர் முதியவர்கள். இந்த நிலை 2030 ஆம் ஆண்டளவில் ஏற்படும் என சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வின் மூலம்,யாழ். குடாநாட்டில் தற்போது வசிப்பவர்களில் 10 வீதத்தினர் முதியவர்களாக காணப்படுகின்றனர்.

இது தவிர,எதிர்காலத்தில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவுள்ளதால், இன்றைய இளம் பராயத்தினர் முதியவர்களைப் பேணி எதிர்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டிகளாகத் திகழ வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டுள்ளது.(உ-4)

# உலகப் பார்வையும் சமூக நோக்கும் ஒரு மாணவனை முழு மனிதனாக்கும்

## கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன்

(கிளிநொச்சி)

இருபது ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் இருண்ட வாழ்விற்குள் இருந்தோம். வெளி உலக வடயங்கள் எதையும் அறிய முடியாதவாறான தோர் இறுக்கமான நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருந்தோம். இந்த நிலையை மாற்றியமைக்க பல்வேறு வழிகளில் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

இருட்டில் வாழ்ந்த எங்களுடைய தமிழ் மாணவ சமூகத்தை, ஒளியை நோக்கி கைப்பிடித்து அழைத்துச் செல்கின்ற பணியை தமிழீழ மாணவர் அமைப்பு பக்குவமாகவே செய்துவருகின்றது.

இவ்வாறு குறிப்பிட்டார் தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன்.

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் அண்மையில் கிளிநொச்சி கல்வி வலய அலுவலகத்தில் இடம்பெற்ற மாணவத் தலைவர்களுக்கான இருநாள் செயலமர்வில் நிறைவுரையாற்றிய இளங்குமரன் மேலும் கூறுகையில்,

மாணவர்கள் பாடசாலைகளுக்கு வெளியே நடப்பவற்றை அறிய ஆவல் கொள்ள வேண்டும். உலகப் பார்வையும் சமூக நோக்கும் ஒரு மாணவனை முழு மனிதனாக்கும். இதற்கான வழிவகைகள் அனைத்தும் இன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தலைமைத்துவப் பண்புகள், தொடர்பாடல், பரஸ்பரம் புரிந்துணர்வு போன்றவற்றுடன் மாணவர்கள் தங்கள் ஆளுமையை வளர்த்துக் கொள்ள இவ்வாறான வதிவிடக் கருத்தமர்வுகள் வழி செய்கின்றன வென்பதை தமிழீழ மாணவர் அமைப்பு நன்றாகப் புரிந்து செயற்படுகின்றது.

போர்ச் சூழல் எமது உயிர், உடமைகளை மட்டுமன்றி அறிவுத் தேடலுக்கான வசதி வாய்ப்புக்களையும் அழித்துள்ளது என்பதை போரினின்றும் மீண்டு நவீன காலத் தொலைத்தொடர்புக் கருவிகளோடு தொடர்பு வைக்கின்ற போது தான் புரிந்துகொள்ள முடிகின்றது என்றார்.

கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கௌரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.இராணிமைந்தன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் ஆகியோர் கருத்துரை வழங்கினர். (உ)



உடுப்பிட்டி மத்தி மகளிர் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட மனையியல் கண்காட்சியை கூட்டுறவுச் சபைத்தலைவர் பெ.கனகசபாபதி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். அருகில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா காணப்படுகிறார்.

### சுகாதார நலன்பேணல் விடயம்

## ஐ.தே.மு.அரசின் திட்டங்களுக்கு ஜனாதிபதி முழு ஆதரவளிப்பாராம்

(கொழும்பு)

ஏற்கனவே தன்னுடைய ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட சுகாதார கொள்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா, சுகாதார அமைச்சர் பி. தயாரத்னவை கேட்டுள்ளார்.

நரஹேன்பிட்டியில் வைத்திய சாலைத் திறப்பு விழாவில் பேசும் போதே இவ்வாறு கேட்டுள்ளார்.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சர் தயாரத்னவும் கலந்து கொண்டிருந்தார்.

ஜனாதிபதி அங்கு பேசும் போது,

போதிய நிதி வசதிகள் இருந்த போதிலும், ஐ.தே.மு.அரசாங்கம் என்னால் ஆரம்பிக்கப்பட்ட சுகாதாரத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றவில்லை.

இத்திட்டம் யாரேனும் ஒருவரால் முனனெடுக்கப்படவேண்டும். இதனை தயாரத்ன மேற்கொள்வார் என நம்புகிறேன்.

அனைவருக்கும் சுகாதாரக்காப்புறுதிகளும் சுகாதாரவசதிகள் பன்முகப்படுத்தப்படுதலும் இத்திட்டத்தில் அடங்கியிருக்கின்றது.

என்னுடைய ஆட்சியில் வரிக்குறைப்பு போன்ற சலுகைகளும் தனியார் வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இதுவரை அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை தனியார் துறையினரும் பொறுப்பேற்க வேண்டும் என நாம் விரும்புகிறோம். ஆசியாவில் சுகாதார நலன்பேணும நாடுகளில் மிகச் சிறந்த ஒன்றாக இலங்கை வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இன்னும் வெகுதூரம் நாம் முன்னேற வேண்டியுள்ளது.

இது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் கடமை. எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் சுகாதார நலனைப் பேணுவதற்கு எனது முழு ஆதரவும் உண்டு என்று ஜனாதிபதி தெரிவித்தார். (உ-6)



சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் இராண்டாவது குருமகா சமாதி குருபூசை தினத்தன்று, இடம்பெற்ற பாதபூசையின் போது எடுக்கப்பட்ட படம்.

# ஆட்சியைப் பிடிக்கும் ஆசையால் அமைதியைக் குழப்புகிறது பொ.ஐ.மு.

## அமைச்சர் ரவி கருணாநாயக்க சாடல்

(கொழும்பு)

1994ஆம் ஆண்டு முதல் 7வருடங்களுக்கு இருண்ட யுகத்திற்கு மககளைத் தள்ளிவிட்டவர்கள் மீண்டும அதனைச் செய்ய முயற்சிக்கின்றார்கள் என வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்க பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சாடியுள்ளார்.


மாத்தறை தெனியாயப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கடந்த 7வருடங்களாக மிகக் கொடூரமான யுத்தத்தை நடத்தி மக்களைப் பலிகொடுத்த பொது ஜன ஐக்கிய முன்னணி தற்போது நிலவிவரும் சமாதானச் சூழலைக் குழப்பி, ஆட்சியைக் கைப்பற்றி மக்களை மீண்டும் இருண்ட யுகத்திற்குத் தள்ளுவதற்கு முயற்சிக்கின்றது.

இதற்கு ஜே.வி.பியின் ஆதரவும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. யுத்தத்தின் மூலம் நாட்டையே அழித்து விடுவதற்கு விரும்புகின்ற இவ்விரு கட்சிகளும் நாட்டுப் பற்றாளர்கள் என்ற போலி வேடம் தரித்து சமாதானத்தைக் குழப்புவதுடன் மக்களிடையே சமாதானம் பற்றி தவறான பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகின்றன.

நாடு போரினால் அழிய வேண்டுமா? அல்லது நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டிற்கு புத்துயிர் கொடுத்து அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டுமா? என்பதை மக்களே தீர்மானிக்கவேண்டும் என்றார்.(உ-10)



உலக உணவு தினத்தன்று ஊரெழு ஸ்ரீகணேசா முன்பள்ளியில் இடம்பெற்ற இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படம். (படங்கள் : சி. லோகதாஸ்)

# அதிகாரமிக்க இடைக்கால நிர்வாகத்தை ஏற்குமாறு தலைவர் பிரபாவை மக்கள் வற்புறுத்துகின்றனர்

## ஆஸி. அதிகாரிகளுக்கு இளம்பரிதி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

**அதிகாரங்கள் மிக்கதான இடைக்கால நிர்வாகத்தை விடு தலைப் புலிகள் ஏற்க வேண்டும் என்பதே வடக்கு -கிழக்குத் தமிழர்களின் ஒட்டுமொத்த அவா.**

**இதன் வெளிப்பாடாக இடைக்கால நிர்வாகத்தை ஏற்குமாறு வற்புறுத்தி தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனுக்கு வடக்கு- கிழக்கில் உள்ள சுமார் 150 பொது அமைப்புக்கள் மகஜர்களை அனுப்பி வைத்துள்ளன.**

இலங்கைக்கான அவுஸ்திரேலியத் தூதரக அரசியல் பிரிவு 3வது செயலர் வில்நன்கொர்விஸ்,அவுஸ்திரேலியப் பாராளுமன்ற உறுப்பினர்



அலன் கிறிவின், நியூசிலாந்து நாட்டு வெளிவிவகாரப் பேச்சாளர் ஹெயித் லொக்கி ஆகியோர் நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகத திற்குச் சென்று கலந்துரையாடலை மேற்கொண்ட சமயம் இவ்வாறு விளக்கமளித்தார் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி.

யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, புலிகளின் அரசியல்துறைப் பிரமுகர் மணிவண்ணன் ஆகியோரும் இக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இளம்பரிதி தொடர்ந்தும் அங்கு கூறுகையில்,

வடபகுதியில் அதிகரித்து வரும் இராணுவ நெருக்கடிகளுக்கு உடனடியாகவே தீர்வுகாண வேண்டும் என்பதை மக்கள் விரும்பி நிற்கிறார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஒன்றரை வருடத்திற்கு மேலாகியும் இயல்பு வாழ்வில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஒப்பந்தத்தில் உள்ள 40 வீதமான விடயங்கள் கூட இங்கு அமுல்படுத்தப்படவில்லையென்பது வருத்தத்திற்குரியது.

யாழ். குடாநாட்டைப் புனரமைப்பதற்குத் தேவையென மதிப்பிடப்பட்ட தொகையில் 10 வீத நிதியே தற்சமயம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் ,இராணுவத்தினர் மக்களை குரோத மனப்பான்மையுடன் அணுகுகின்றனர் என்பதற்கு அண்மைக்காலச் சம்பவங்கள் சான்றாதாரங்களாகவுள்ளன.

பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு, உண்மைச் செய்திகளைச் சேகரிக்கச் செல்லும் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுதல்,தொழிலுககுச் செல்லும் மீனவர்கள் மீதான நியாயமற்ற கட்டுப்பாடுகள் அவர்கள் கண்மூடித்தனமாகத் தாக்கப்படுதல் என படையினரின் அடாவடிகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன என்று தமிழ் மக்கள் தரப்பு நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

இதன் பின்னர் அங்கு இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துக் கூறிய அவுஸ்திரேலியப் பாராளுமன்ற உறுப்பினர் அலன் கிறிவின்,



புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான குடாநாட்டு நிலைமைகள் மற்றும் எமது அரசாங்க நிதியுதவியுடன் இங்கு மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் ஆகியவற்றை அவதானிப்பதை நோக்கமாகக் கொண்டே எமது விஜயம் அமைகிறது.

நான் இலங்கை வந்த பின்னர் அவதானித்ததன் அடிப்படையில் இங்கு நிரந்தர சமாதானம் விரைவில் மலரும் என்பதை உறுதியாகக் கூறமுடிகிறது.

சமாதானத்தைக் குழப்பும் சக்திகளை முறியடித்து சமாதானப் பயணத்தை தொடர்வது காலத்தின் தேவையாகும் என்றார்.

இச் சந்திப்பை முடித்துக் கொண்டு, கடற்றொழிலாளர்கள் சங்கப் பிரதிநிதிகள், கண்ணிவெடி அகற்றும் பிரிவினர்,கியூடெக் இணைப்பாளர் சி. ஜீ. ஜெயக்குமார் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை இவர்கள் சந்தித்துப் பேசினர். (உ-7)

## அமைச்சர் சந்திரசேகரன் குழுவினர் புலிகளுடனான சந்திப்புக் குறித்து பிரதமர் ரணிலுக்கு எடுத்துரைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வனுக்கும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பெ.சந்திரசேகரனிற்கும் இடையே கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்புக் குறித்து அமைச்சர் சந்திரசேகரன் தலைமையிலான குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவிற்கு விளக்கிக் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் இக்குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைமை குறித்து ஆராய்ந்த போதே தழிழ்ச்செல்வனுடனான சநதிப்புக் குறித்து விளக்கியுள்ளனர்.

சமாதானத்திற்கு எதிராக இனவாதிகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை எதிர்த்து தமிழ் மக்களின் நியாயத் தன்மையை தென்பகுதி மக்களிடம் தெளிவுபடுத்தும் சகல பிரசார நடவடிக்கைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்பதையும் அவர்கள் பிரதமரிடம் தெளிவுபடுத்தியுள்ளனர்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்ட மலையக மக்களின் அரசியல் தீர்வு பற்றிய கோவை ஒன்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. (உ-10)

## ''சிசு உதான'' எழுத்துப்பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

மக்கள்வங்கி நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான ''சிசு உதான'' பொதுஅறிவுப் போட்டி முதற்கட்ட எழுத்துப்பரீட்சை ஒரு நாள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டி எதிர்வரும் 1ஆம் திகதி சனிக்கிழமை வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், அன்றைய தினம் விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் வேறோர் பரீட்சை இடம் பெறவிருப்பதால், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00மணிக்கு இப் பரீட்சை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)



மக்கள் வங்கியின் சங்கானைக் கிளையில் இடம்பெற்ற தீபாவளி விசேட நிகழ்வில் சங்கானைப் பிரதேச செயலர் சிவராசாவை வாடிக்கையாளர் மு.சரவாணபவானந்தன் மாலை அணிவித்து வரவேற்கிறார். அருகில் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் மு.க. சிவபாதவிருதயர், இளைப்பாறிய சேவைக்கால ஆலோசகர் க. சிவசண்முகமூர்த்தி ஆகியோர் காணப்படுகின்றனர்.

## தேங்காய் உற்பத்தியைக் கூட்ட பாங்கான யோசனைகள்

முதிர் தென்னைகளின் உற்பத்தியைக்கூட்ட தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை யாழ். குடாநாட்டு தென்னைச் செய்கையாளர்களுக்கு சில ஆலோசனைகளை வழங்கியுள்ளது. அதன் விபரம் வருமாறு,

குடாநாட்டில் மழை பெய்ய ஆரம்பித்தவுடன் முதிர் தென்னைகளுக்கு ஏ.பி.எம்.-(முதிர் மரக்கலவை) உரத்தினை உரமானியத்திட்டத்தின் கீழ் வாங்கிப் போடுவதன் மூலம் தேங்காய் உற்பத்தியைக் கூட்டலாம்.

குடாநட்டில் உள்ள ஏதாவது கமநல சேவை நிலையத்தில் ஏ.பி.எம். (தென்னை முதிர் மரக்கலவை) உரத்தினை வாங்கி அதன் பற்றுச்சீட்டினை தென்னை அபிவிருத்தி அலுவலரிடம் சமர்ப்பித்து , உடனேயே உரமானிய விண்ணப்பப் படிவத்தினையும் பெற்று தென்னைச்செய்கையாளர்கள் உரமானியத்தினைப் பெறமுடியும்.

5வருடங்களுக்குட்பட்ட பாளை வராத தென்னைகளுக்கு வை.பி.எம். உரத்தினையும்,பாளை வந்து காய்க்கும் தென்னைகளுக்கு 3கிலோ ஏ.பி. எம். உரத்தினையும் தென்னை மர அடியில் இருந்து 6அடி சுற்றுவட்ட பரப்பளவு முழுவதும் மண்ணைக் கொத்திப் பிரட்டிய பின்பு தூவி மண்ணுடன கலந்து விடவும். இப்படிச் செய்வதன் மூலம் தென்னையில் இருந்து அதிக அளவு தேங்காய்களை மாதாமாதம் பெற்றுக்கொள்ளமுடியும்.

உரமானியத்தினையும் மண்ஈரப் பாதுகாப்பு மானியத்தினையும் பெறவிரும்பும் தென்னைச்செய்கையாளர்கள் உடனடியாக காலம் பிந்தாமல் ஜெ.சத்தியேந்திரன், யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்,கமநல சேவை நிலையக்கட்டடம் நல்லூர் எனும் முகவரியில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு மானியத்திட்டத்தில் இணைந்து பயன் அடையலாம். (உ)

## பொலித்தீன் பாவித்தால் பத்தாயிரம் தண்டம்

### தமிழீழ சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

வன்னி மாவட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள பொலித்தீன் பாவனைத் தடையையும் மீறி பொலித்தீனைப் பயன்படுத்தி வருபவர்களிடம் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும் என தமிழீழ சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

கிளிநொச்சி,கனகராயன்குளம், மாங்குளம் ஆகிய பகுதிகளில் இது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வருவதாக தெரிவித்துள்ள சுகாதாரக் குழுவினர், எதிர்காலத்தில் பொலித்தீன் பாவனையால் உண்டாகும் பாரிய பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்காகவே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் பொலித்தீன் பாவனையைத் தடை செய்யும் திட்டம் அரசினால் அமுல்படுத்தப்பட்டபோதும் மக்கள் பொலித்தீன் பாவனையைக் குறைக்கவில்லை எனபது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## 750ஆம் இலக்க பஸ்சேவை சீரில்லை

(கோப்பாய்)

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வழித்தட சேவையில் ஈடுபட்டு வரும் 750ஆம் இலக்க வடபிராந்திய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துச் சேவை ஒழுங்கில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பாடசலை மாணவர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதாகவும் இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பொதுமக்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.(உ-79)

## மணவாளக் கோல விழா

(வடலியடைப்பு)

பண்டத்தரிப்பு சாந்தை சித்தி விநாயகர் ஆலய மணவாளக்கோல மஹாசங்காபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி புதன் கிழமை நடைபெறவுள்ளது.(உ-21)



தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் யாழ். பிராந்தியக் காரியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற தென்னை உரமானியத் திட்ட அனுமதிப்பத்திர விநியோக வைபவத்தில் கலந்துகொண்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன், சபைத் தலைவர் லிங்கன் பெர்னாண்டோ, பிராந்திய முகாமையாளர் சி. சிவச்சந்திரன்,பிரதிப் பொது முகாமையாளர் ராஜபக்ஷ ஆகியோரைப் படத்தில் காணலாம்.

# சென்றிடுவோம் எட்டுத் திக்கும்

# வெற்றிகள் பல ஈட்டி வருவோம்

**இலங்கை வலைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட 2003ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை ரீதியான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் கடந்தவார இறுதியில் அனுராதபுரத்தில் நடைபெற்று முடிவடைந்துள்ளன.**

**இப் போட்டிகளில் தனது கன்னிப்பயணத்திலேயே யாழ். மாவட்ட கலப்பு வலைபந்தாட்ட அணியானது சம்பியன் பட்டத்தை வென்றெடுத்து யாழ்.மண்ணிற்கு பெருமையையும், புகழையும் அகில இலங்கை ரீதியில் ஏற்படுத்தியிருக்கின்றது. இப் போட்டி பற்றிய விரிவான பார்வை எங்கள் வலம்புரி வாசகர்களுக்காக...**

யாழ்.மாவட்ட கலப்பு வலைபந தாட்ட அணியானது இறுதிப் போட்டியில் கட்டுநாயக்கா சுகந்திர வர்த்தக வலய அணியை 11:8என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு இவ்வாண்டுக்கான தேசிய சம்பியன் பட்டத்தை வென்றெடுத துள்ள அதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி இப்போட்டிகளில் கலந்துகொண்ட மற்றுமொரு அணியான வவுனியா மாவட்ட கலப்பு அணியானது மூன்றாம் இடத்தினை பெற்றுக்கொண்டது.

மூன்றாம் இடத்திற்கான இப் போட்டியில் வவுனியா மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியானது கொழும்பு மாவட்ட கலப்பு வலைப் பந்தாட்ட அணியை கடும் போட்டியின் இறுதியில் 8:7என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டு மூன்றாம் இடத்தை வெற்றி கொண்டுள்ளது.

யாழ்.மாவட்ட கலப்பு வலைப் பந்தாட்ட அணியானது மிகத் திறமையாக விளையாடி இறுதிப் போட்டி வரை முன்னேறியதுடன் சம்பியன் பட்டத்தையும் வென்றெடுத்தது. வலைப்பந்தாட்டக் கலப்பு அணிக்கான போட்டி ஒன்றில் அகில இலங்கை ரீதியில் யாழ்.மாவட்டத்திற்கு சம்பியன் பட்டத்தினை முதன் முதலாக பெற்றுக் கொடுத்ததுடன் தமது தாயக மண்ணிற்கும் பெருமையை தேடித் தந்துள்ளனர் யாழ். மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியினர்.

இச் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியானது தான் அங்கம் வகித்த 'பி' குழுவிற்கான லீக் போட்டிகளில் 4போட்டிகளில் வெற்றி பெற்றதுடன், ஒரு போட்டியில் மட்டுமே தோல்வியைத் தழுவிக்கொண்டது. இதன் மூலம் 'பி' குழுவில் 20 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டது.

யாழ்.மாவட்ட கலப்பு வலைப் பந்தாட்ட 'பி' குழுவிற்கான லீக் போட்டிகளின் முதலாவது போட்டியில் கம்பஹா மாவட்ட கலப்பு அணியை 14:10 புள்ளிகள் அடிப் படையிலும் இரண்டாவது போட்டியில கண்டிமாவட்ட கலப்பு அணியை 12:01என்ற புள்ளிகள் அடிப்படையிலும் மூன்றாவது போட்டியில் குருநாகல் பொலிஸ் அணியை 11:05 புள்ளிகள் அடிப்படையிலும் வெற்றிகொண்டு நல்லதொரு ஆரம்பத்தினை ஏற்படுத்திக் கொண்டிருந்த வேளையில் நான்காவதாக நடைபெற்ற 'பி' குழுவிற்கான கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலய அணியுடனான லீக் போட்டியின் போது 15:09 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோல்வியைத் தழுவிக் கொண்டது. எனினும் இதன் பின்னர் நடைபெற்ற போட்டிகள் யாவற்றிலும் சிறப்பாக விளையாடி இருந்த யாழ்.மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியின் வீர, வீராங்கனைகள் தொடர் வெற்றிகளைப் பெற்று சம்பியன் பட்டத்தை வென்றெடுத்தனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்ட கலப்பு வலைப் பந்தாட்ட அணியானது தனது 'பி' குழுவிற்கான கடைசி லீக் போட்டியில் அனுராதபுர மாவட்ட கலப்பு அணியை 15:09என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு 'பி' குழுவில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இக் குழுவில் யாழ்.மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியானது 20புள்ளிகளைப் பெற்றிருந்தது. எனினும் இக் குழுவில 5 போட்டிகளிலும் வெற்றியைப் பெற்றுக்கொண்டிந்த கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலய கலப்பு அணி 25புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் இருந்தது.



வெற்றிக் கேடயத்தை அனுராதபுர மாவட்ட பொலிஸ் அதிகாரியிடம் இருந்து பெறும் யாழ். மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியின் தலைவர் சூ.அகிலன்.

இதன் காரணமாக யாழ்.மாவட்ட கலப்பு அணி 'ஏ' குழுவில் 5பேட்டிகளிலும் வெற்றியைப் பெற்று 25 புள்ளிகளைப் பெற்றிருந்த கொழும்பு மாவட்ட கலப்பு அணியை அரை இறுதிப் போட்டியில் எதிர்கொண்டது.

இறுதிப் போட்டியில் தனது குழுவிற்கான லீக் போட்டியின் போது தோல்வியை தழுவிக்கொண்ட கட்டுநாயக்க சுகந்திர வர்த்தக வலய கலப்பு அணியை யாழ். மாவட்ட கலப்பு அணியினர் எதிர்கொண்டனர். இப் போடடியில் முன்னர் தமது அணி விட்ட தவறுகளை சரிசெய்து கொண்டும், புதிய வியூகம் அமைத்தும விளையாடி இருந்த யாழ். மாவட்ட அணியானது போட்டியின் இடைவேளை நேரத்தின் போதே 5:4என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணியில் இருந்தது.



வெற்றி பெற்ற யாழ். மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியினர்: நிற்பவர்கள்:- (இடமிருந்து வலம்) த.சந்திரமதி, கு.முகுந்தன், சூ.அகிலன் (அணித்தலைவர்) திருமதி.ஏ.எவ்.ஜே.ரூபசிங்கம் (பயிற்றுனர்), செ.தயாளினி (உபதலைவி), அ.அனந்தன், க.விஜிதரன், இருப்பவர்கள்:- (இடமிருந்து வலம்) கு.செந்தில்குமரன், தே.கௌரி, ம.மாலினி, ச.விஜயந்த.

எனினும் இடைவேளை நேரத்தின் பின் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலய அணியானது ஒரு கட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை விட கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டிருந்த போதும் போட்டியின் இறுதி நேரத்தில் விரைவான புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட யாழ்.மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியானது 11:08என்ற புள்ளிகள் அடிப்படையில் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலய அணியை தோற்கடித்து சம்பியன் பட்டத்தை வென்றெடுத்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயங்களில் ஒன்றாகும்.

இப் போட்டியில் வெற்றிபெற்ற யாழ்.மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணிக்கு 4ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசுக்காசோலையும் இவ் ஆண்டுக்கான வெற்றிக் கேடயமும் வழங்கப்பட்டதுடன், வீர, வீராங்கனைகளுக்கு சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இப் போட்டியில் சிறந்த பந்து காப்பாளராக (Best Goal Detenter) யாழ்.மாவட்ட கலப்பு வலைப்பந் தாட்ட அணியின் தலைவர் செல்வன் சூ.அகிலன் அவர்களும், சிறந்த பேறு பெறுனராக (Best Goal Shooter) செல்வன் க.விஜிதரன அவர்களும் தெரிவுசெய்யப்பட்டு சிறபபுப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தமிழர் தாயக மண்ணிற்கு வலைப்பந்தாட்டப் போட்டிகளில் கிடைத்துள்ள இரண்டாவது பெரிய வெற்றி இதுவாகும். ஏற்கனவே வடக்குக்கிழக்கு பெண்கள் வலைப் பந்தாட்ட அணியினர் இங்கிலாந்தில் பெற்றுவந்த தொடர் வெற்றிகளை அடுத்து யாழ்.மாவட்ட கலப்பு வலைப்பந்தாட்ட அணியின் அகில இலங்கை ரீதியிலான வெற்றியின் மூலம் மேலும் ஒருபடி உயர்ந்து தமது பெருமைகளையும், திறமைகளையும் வெளி உலகிற்கு எடுத்துக்காட்டி வருகின்றனர்.

**தொகுப்பு: தஜீ**

* * *

# தீவக மக்களின் தாகம் தீர்க்க

# தகுந்தநடவடிக்கை எடுக்கப்படுமா?

**செய்திக் கட்டுரை**

**க.இராசேந்திரம்**

சகல மனிதர்களுக்கும் அவர்களது உயிர் வாழ்க்கைக்கு நீர் மிகவும் அத்தியாவசியமானது. சராசரியாக ஒரு மனிதனுக்கு தினமொன்றிற்கு 20லீற்றர் நீர் தேவையாக உள்ளது. ஆனால் உலகின் பல பாகங்களிலும், ஏன் இலங்கையின் வடபாகத்தே குறிப்பாக தீவகத்தில் வாழும் மக்கள் இந்த நீரைப் பெற்றுக்கொள்ளப்படாத பாடுபட வேண்டியுள்ளதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

அதிகரித்துவரும் நீர்ப்பிரச்சினையால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும் பிள்ளைகளுமே. தினமும் 5-6 கிலோமீற்றர் தூரம் வரை நடந்துசென்று நீரைச் சேகரித்து சுமந்துவந்து தமது அன்றாடத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையை தீவகத்தில் தினமும் அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

யுத்தம் காரணமாக கடந்த இரு சதாப்தங்களாக தீவக மக்கள் சந்தித்துள்ள பேரழிவுகளில் மனித வளமும், நீர்வளமும், வனவளமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கும், வளத்திற்கும் அதன் மூன்றில் ஒரு பங்கு நிலமாவது வனவளமாகப் பேணப்படவேண்டும். இந்த உண்மையும், தேவையையும் தீவக மக்களைப் பொறுத்தமட்டில் இன்று உணரப்படாத விடயங்களாகிவிட்டன.

முன்னர் தீவகத்தை வனவளமும், நீர்வளமும் மிக்க பூமியாகவே கட்டிக்காத்து வந்துள்ளனர். தீவகத்தின் மழைவீழ்ச்சிக்கும் உணவுத் தேவைக்கும் அக்காலத்து மக்கள் பனைவளத்தை பேணிப்பாதுகாத்து வந்துள்ளனர். விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படாத நிலங்களில பனந்தோப்புக்களை உருவாக்கினர். இவற்றை அவர்கள் தமது சொந்த நலனுக்காக வன்றி எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதியே செய்தனர்.

சுருங்கக்கூறின் இற்றைக்கு 20-30வருடங்கள் முன் வளம் நிரம்பிய பூமியாகவே விளங்கியது. யுத்தம் காரணமாக தீவகத்தில் மாத்திரம் 10இலட்சத்திற்கும் அதிகமான பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகப் புள்ளிவிபரங்களின் ஊடாக அறியக்கிடக்கிறது.

இது போதாதென்று தீவகத்தில் மீதியாக இருக்கும் பயன்தரு மரங்கலெல்லாம் விறகுத் தேவைக்காக கண்மூடித்தனமாக வெட்டி அழிக்கப்படுகின்றன. தீவகம் வளம்பெற வேண்டும் ஆயின், ஏற்கனவே இழந்துபோயுள்ள மரவளத்தை மீட்டெடுக்கும் முகமாக பல்வேறு மரக் கன்றுகளை நட்டு வளர்க்க வேண்டும்.எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி இவ்வாறான புதிய மரங்களை நட்டு தீவகத்தின் மர வளத்தை பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை தீவக மக்களையே சாரும். இது முழுக்க முழுக்க தீவக மக்களைப் பொறுத்த விடயமே அன்றி அரச செயற்பாட்டையோ, அரச சார்பற்ற நிறுவனங்களையோ நம்பி இருக்கும் கருமமல்ல.

தீவகத்தில் வன வளத்துடன் நீர்வளத்தையும் பெரிதும் கவனத்தில் கொள்ள வேண்டும் தீவக மக்கள் முன்னர் வனவளத்துடன், நீர்வளத்தையும் பேணிப்பாதுகாத்து வந்துள்ளனர். அவர்கள மழை நீரை சேமிக்கும் முகமாகப் பேணிய பல அணைக்கட்டுக்களும், பல நூறு சிறு சிறுகுளங்களும், நீர்த்தேக்கங்களும் இன்று இருந்த இடம் தெரியாமல் தூர்ந்து போயுள்ளன. அக்காலத்து தீவகமக்கள் கூடியளவு மழைநீரைச் சேமித்து தமது பிரதேசத்தின் நன்னீர் வளத்தைப் பெருக்கினர். இன்றோ அவை எல்லாம் அழிந்து உவர் நீர்த்தரைகளாக மாறியுள்ளன.

கடந்த 20வருடகாலப் போரினால் தீவகத்தில் நீர்வளச்சபை, நீர்வளங்கல் வடிகால் அமைப்புச்சபை, நீர்ப்பாசனத்திணைக்களம் போன்றவற்றின் பணிகள் தொடர்ந்தும முடங்கிய நிலையிலேயே உள்ளன. இதன் காரணமாகத் தீவகத்தைச் சூழவுள்ள உவர்நீர் காப்புத் திட்டங்கள் எதுவுமில்லாமையினால் நிலததடி நீருடன் பெருமளவில் கலந்துகொள்கிறது. இதற்கு முக்கிய காரணம் நன்னீர் கால்வாய்கள் நேரடியாக கடல் நீருடன் போய்ச் சேருகின்றன.

மழைநீரைத் தேக்கும் குளங்களும் எதுவித புனரமைப்பு வேலைகளும் செய்யப்படாதுள்ளன. கடல் பகுதிக்கும், தரைப்பகுதிக்கும் இடையிலான கடல் நீர்த்தடுப்பு அணைகள் எதுவும் இல்லை.

இதன் காரணமாக தீவகத்தில் உள்ள சொறப எண்ணிக்கையான நன்னீர் ஊற்றுக் கிணறுகளும் காலபபோக்கில் உவர்த்தன்மையுடையவையாக மாறக்கூடிய வாய்ப்புள்ளது.

தீவக மக்கள் இனிமேலும் குடிதண்ணீர் பிரச்சினைகளுக்கு ஆளாகாமல், நோய் நொடியின்றி வாழ வேண்டுமாயின், நாட்டில் மழை பெய்வதற்கான காரணங்களை உணர்ந்து அதற்கேற்ற வகையில் இயற்கை வளங்களைப் பேணுவதில் அக்கறை காட்டவேண்டும்.

தீவகம் வரண்ட பிரதேசம். வானம் பார்த்த பூமி அதனால் கோடை காலங்களில் பல பிரதேசங்களில் வழமையாக தண்ணீர்ப்பஞ்சம் ஏற்படுவதுண்டு.

மனிதனுக்கு உணவை விடவும் பிரதானமான தேவையாக உள்ளது தண்ணீர். எனவே தண்ணீர்த்தேவையையும் முக்கியத்துவததையும் உணர்ந்து கிடைக்கும் மழைநீரைத் தேக்கவும் குளங்களைத் தோண்டி ஆழமாக்கவும், தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தவும் மரங்களைக் கண்டபடி தறிக்காமல் இருப்பதோடு மட்டுமன்றி அவற்றைப் பேணிப் பாதுகாக்கவும் தீவகத்தின ஒவ்வொரு பிரஜையும் அக்கறைகொள்ள வேண்டும் இல்லையேல், வருங்கால சந்ததியினர் ஆபிரிக்க நாட்டு மக்களைப் போல் பட்டினியால் வாடுவர், பசியால் மடிவர்.□

## இன்று ஒரு தகவல்

# தவறு

இந்த உலகில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசை. ஒரு ராஜாவுக்கு ஒரு வீநோதமான ஆசை. அது என்னவென்றால், விதம் விதமான விசிறி மட்டைகளை வாங்கிச் சேகரித்து வைக்க வேண்டும் என்பதே. இப்படி எங்கே போனாலும் விசிறி மட்டைகளையே வாங்கி வந்து 2சேர்த்துக்கொண்டிருப்பார்.

ஒரு நாள் தெரு வழியாக ஒருவன் விசிறி மட்டை விற்றுக்கொண்டுபோய்க்கொண்டிருந்தான். இவர் அதனைக் கண்டார். சும்மா இருப்பாரா? உடனே அந்த ஆளை அரண்மனைக்குக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னார். விசிறி விற்கிறவனும் வந்தான். ''உன்னிடம் விஷேசமான விசிறி மட்டை ஏதாவது இருக்கிறதா? அப்படி இருந்தால் கொடு'' என்றார். ''அரசே என்னிடம் இருக்கின்ற விசிறிமட்டைகள் எல்லாமே மிகவும் விஷேசமானவைதான். பார்ப்பதற்கு மிகவும் சாதாரணமாகத்தான் தெரியும்'' இருந்தாலும் இதன் தரம் மிகவும் உயர்வு. ஆதலினால் ஒரு விசிறி மட்டையின் விலை நூறு ரூபா என்றான் அந்த ஆள். ராஜாவுக்கு மிகவும் ஆச்சரியம். ''என்னப்பா இது! பார்த்தால் பத்துக்காசு கூடப் பெறாது போல இருக்கிறது. இதற்குப் போய் நூறு ரூபா விலை சொல்லுகிறாயே! அப்படி என்ன விஷேசம் இதிலே'' என்றார்.

''மன்னா! உங்களிடம் பொய் சொல்லி நான் ஏமாற்ற முடியுமா? எனக்கு ஏது அவ்வளவு தைரியம்? இந்த விசிறி மட்டையில் உள்ள விஷேசம் என்ன வென்றால் இது நூறுவருஷம் உழைக்கும். அதற்கு நான் உத்தரவாதம் கொடுக்கின்றேன்'' என்றான். ''அப்படி என்றால் அந்த விசிறியை வாங்குங்கள்'' என்றார் ராஜா! அரண்மனையில் அதை நூறு ரூபா கொடுத்து வாங்கிக் கொண்டார்கள்.

இருந்தாலும் ராஜாவுக்கு மனதிற்குள் ஒரு சந்தேகம் கொஞ்சம் யோசித்தார். பின்பு அந்த ஆளைப்பார்த்து ''இதோ பாரப்பா... இன்றிலிருந்து நான் இந்த விசிறி மட்டையை உபயோகப்படுத்தப்போகிறேன். நீ எதற்கும் ஒரு வாரம் கழித்து என்னை வந்து பார்க்க வேண்டும்'' என்றார். ''சரி'' என்று ஒத்துக் கொண்டான் இவன். ராஜா அந்த விசிறிமட்டையை எடுத்து தினமும் விசிறிக்கொண்டே வந்தார்.

மூன்று நாட்களிலேயே அந்த விசிறியின் நடுக்குச்சி வெளியே வந்து விட்டது. அடுத்த மூன்று நாட்களில் மிகுதி விசிறி மட்டையும் வீணாகிப் போய்விட்டது. ''ஆகா! ஏமாந்து விட்டோம். அந்த ஆள் இனி மேல் அரண்மனைப்பக்கம் வரமாட்டான்'' என்று நினைத்தார் ராஜா. ஆனால் அந்த ஆள் சரியாக ஒரு வாரத்தில் திரும்பி வந்து ராஜாவைப்பார்த்தான். அவர் கோபமாக இவனைப்பார்த்தார்.

''என்னப்பா... என்னிடமே விளையாடுகிறாயா? உன்னுடைய விசிறிமட்டை நூறு வருஷம் உழைக்கும் என்று சொன்னாய். ஒரு வாரத்திற்குள்ளேயே ஒன்றுமில்லாமல் போய் விட்டது. ராஜாவை ஏமாற்றினால் என்ன தண்டனை தெரியுமா?'' என்றார். ''அரசே அப்படி நினைக்காதீர்கள் நான் ஒன்றும் தப்புச் செய்யவில்லை. மன்னருக்கு விசிறி மட்டையை உபயோகிப்பது எப்படி என்று தெரியாதுபோலிருக்கிறது. முறையாகவும் சரியாகவும் உபயோகப்படுத்தினால் நூறு வருஷம் கண்டிப்பாக உழைக்கும்'' என்றான்.

''என்ன எனக்கு விசிறவும் தெரியாதா என்று வேகமாகக் கேட்டார் ராஜா. ''தயவு செய்து நீங்களும் எப்படி விசிறினீர்கள் என்று சொல்லுங்கள்'' என்று கேட்டான் இவன் . இப்படித்தான் விசிறினேன் என்று எல்லோரும் விசுறுவது போல் விசிறி மட்டையை எடுத்து விசிறிக் காட்டினார் ராஜா. ''சரிதான் இப்பொழுது தான் என்ன தவறு நடந்ததென்பது எனக்குப் புரிகின்றது. இந்த விசிறி மட்டையை நீங்கள் உபயோகப்படுத்தவேண்டிய முறையே வேறு'' என்றான் அந்த ஆள். எப்படி உபயோகப்படுத்தவேண்டும் என்று ராஜா ஆர்வமாகக் கேட்டார். அந்த ஆள் அதை விளக்க ஆரம்பித்தான்.

''விசிறிமட்டை எடுத்து நமது முகத்திற்கு முன் ஒரு கையில் அசையாமல் பிடித்துக்கொள்ள வேண்டும். நமது தலையை மட்டும் அப்படியும் இப்படியும் ஆட்டவேண்டும். விசிறி மட்டையை ஆட்டக்கூடாது. நீங்கள் வீசிறியை ஆட்டியிருக்கின்றீர்கள் அது தான் வீணாகப் போய் விட்டது. அதனால் தவறு என் விசிறி மீது இல்லை. உங்கள் மீது தான் தவறு'' என்றான்.

இன்று உலகம் இப்படித்தான் போய்க்கொண்டிருக்கிறது. நாம் செய்கின்ற தவறுக்கு மற்றவர்கள் மீது பழியைப்போடுகிறோம். தவறுகளை நியாயப்படுத்த ஆரம்பிக்கின்றோம்.

ஒருவன் அப்படித்தான் புதிதாக ஒரு கார் வாங்கினான். கார் ஓட்டவும் கற்றுக்கொண்டான். ஒரு புளிய மரத்தில் கொண்டு போய் மோதிவிட்டான் ''என்னடா இப்படிச் செய்து விட்டாயே என்று கேட்டால்'' தவறு என்மேல் இல்லை ஐயா! நான் நேராகத்தான் வந்து கொண்டிருந்தேன் எல்லோரும் விலகினார்கள். இந்தப் புளியமரம் மட்டும் விலகவில்லை. அதனால் தான் இப்படியாகிவிட்டது என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# கைதானோர் காணாமல்போனமைக்கு இராணுவத்தினரே முழுப்பொறுப்பு

## மனித உரிமைகள் ஆ.கு. அறிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் 1990 ஆம் ஆண்டிற்கும் 1998 ஆம் ஆண்டிற்கும் இடையில் 245 தமிழர்கள் கைதாகி காணாமல் போனமைக்கு இராணுவமே பொறுப்பு என மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி காலப்பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்காக மூவர் கொண்ட குழுவை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்திருந்தது.

அதற்கமைய இக் குழு வடக்கில காணாமல் போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு அது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தது.

அந்த அறிக்கையின் சாராம்சம் பற்றி நேற்று முன்தினம் கொழும்பில் மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகத்துறையினர் ஆகியோரிற்கு விளக்கிக் கூறப்பட்டது. அதன் பின்னர் அதன் அறிக்கை மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

வடக்கில் காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவிற்கு இராணுவம் போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை.

காணாமல் போனவர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள். அதனை விட, போர் நிகழ்ந்த பகுதிகளில் பலர் காணாமல் போயுள்ளனர். இது பற்றியும் விசாரணை செய்ய வேண்டியிருக்கிறது.

அத்துடன், தமிழர்களை கைது செய்தவர்கள், கைது செய்யப்பட்டு இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்ட சமயம் பணியாற்றியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் எங்களால் சமர்ப்பிக்கப்பட்ட 37 இராணுவத்தினரின் பட்டியலில் ஒருவரைக்கூட அடையாளம் காண முடியாமல் போயிருக்கின்றது.

இதற்கு இராணுவத்தின் திறமையின்மை, அலட்சியப்போக்கு, ஒத்துழைப்பு வழங்கினால் பழி சுமத்துகின்ற சாட்சியங்கள் அம்பலமாகிவிடும் என்ற அச்சம் காரணமான பின்னடிப்பு போன்றவையே அடிப்படைக் காரணங்களாகும் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் 25 முஸ்லிம்கள் காணாமல் போனமை பற்றியும் இக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றதாக தெரிவிக்கப்படுகிறது. (பி-5)

# அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் கொள்கைத் தெளிவு அவசியம்

## கம்யூனிஸ்ட் கட்சி ஜனாதிபதிக்கு வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக அதிகாரப் பரவலாக்கலினை அமுலாக்கும் யோசனையை மாற்ற வேண்டாமென இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

இது குறித்து அக் கட்சி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு-கிழக்கு பகுதிகளில் தனிநாடு அமைக்கப்பட்டால் அங்கு வாழும் சிங்கள, முஸ்லிம் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வு விடயத்தில் மாற்றம் எதுவும் இல்லையென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது.

சுதந்திரக்கட்சி மத்திய குழுவின் இந்த அறிவித்தல் திருப்தி தருவதாக உள்ளது.

அதேவேளை, இனவாதக் கட்சிகளுடன் சுதந்திரக்கட்சி இணைவதால் ஏற்படக்கூடிய சிக்கல்கள் குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும்,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் அதனை உள்ளடக்கிய பொதுஜன ஐக்கிய முன்னணியும் நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக ஒரு பொதுவான கொள்கையைக் கொண்டுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் 17 கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அன்றில் சில இராணுவத் தீர்வையும் விரும்புகின்றன.

இனவாதக் கட்சிகளுடன் சுதந்திரக்கட்சி இணைந்து செயற்பட விரும்பினால் அக்கட்சி கொண்டிருக்கும் தனது கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும்.

ஆயினும் தமது கொள்கையில் எவ்வித மாற்றமும் இல்லையென ஜனாதிபதி அறிவித்து வருகிறார்.

சுதந்திரக்கட்சியின் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படாமல் இருப்பதோடு தற்போதைய தேவைகளுக்கு ஏற்ப அக்கொள்கை விஸ்தரிக்கப்பட வேண்டும் எனவும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பி-05)

## இராசி பலன்

**30. 10. 2003**

**(ஐப்பசி 13, வியாழன்)**

**பஞ்சமி - மு.ப.7.56வரை**

**சஷ்டி - வை. 5.58 வரை**

**மூலம் - மு.ப. 10.06 வரை**

**இராகுகாலம் - 1.33-3.03**

**சுபநேரம் -7.33 - 9.03**

**கந்த சஷ்டி விரதம் முடிபு**

**மேடம்**
புதிய சிந்தை, பிரயாணம், நிர்ப்பந்திக்கப்படுதல், சரீர பீடை.

**இடபம்**
காரிய தடங்கல், நண்பர்கள் வரோதம், பிரணாயக் கஷ்டம், போசன சுகம்.

**மிதுனம்**
கௌரவமான நிலை, எடுத்த காரியம், கைகூடும், வருமானம் அதிகரிக்கும் உடல் நலம்.

**கடகம்**
முயற்சி கைகூடும், குடும்ப நலம், பாராட்டு, புத்தி சாதுரியம்.

**சிங்கம்**
உறவினர் சந்திப்பு, வியாபார விருத்தி, காரிய தாமதம், சிந்தனை மிகுதி.

**கன்னி**
புத்தி சஞ்சலம், போசன சுகம், வெகுமானம், கௌரவம்.

**துலாம்**
மனோ சௌக்கியம், பிரயாண நன்மை, வாக்குமேன்மை, காரிய நன்மை.

**விருச்சிகம்**
அதிக செலவு, கருமங்கள் தாமதமாகும், போசன சுகம், விவாதம்.

**தனுசு**
எடுத்த கருமங்கள் கைகூடும், வெகுமானம், சயன சுகம், போசன சுகம்.

**மகரம்**
காரிய அலைச்சல், நண்பர்கள் மனஸ்தாபம், கீழ்ப்படிதல், தன விரயம்.

**கும்பம்**
பெருமையடைதல், பாராட்டு, காரிய சித்தி, பொருள் சேர்க்கை.

**மீனம்**
அன்பளிப்பு, தேகாரோக்கியம், அதிகாரம், தொழில் முன்னேற்றம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

## விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள்

# நியமனங்கள் இரத்தை தவிர்க்குமாறு உத்தரவு

(கொழும்பு)

விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் உள்ளக வர்த்தகப் பரிசோதகர்களின் நியமனங்களை இரத்து செய்வது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கை எடுப்பதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

116 விலைக்கட்டுப்பாட்டு அதி காரிகள ஒருங்கிணைநது தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பான மனுவை விசாரணை செய்த பின்னரே, உயர் நீதிமன்றம் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பதில் உள்ளக வர்த்தக ஆணையாளர், நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை, வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் உட்பட பலர் இம்மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

விலைக்கட்டுப்பாட்டுத்திணைக்களம் மற்றும் உள்ளக வர்த்தகத் திணைக்களம் ஆகியவற்றை தனியார் மயப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதால் அதில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் தொழில் வாய்ப்பை இழக்க நேரிடும் எனவும் மனுவில். குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-61)

# கோடீஸ்வரரைக் காணவில்லை

(கொழும்பு)

இலங்கையில் குறிப்பிடத்தக்க கோடீஸ்வரர்களில் ஒருவராகிய வர்த்தகர் இஸ்மத் யபீர் கடந்த சனிக்கிழமை முதல் காணாமல் போயுள்ளார் என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் சம்பவத் தினத்தன்று பேருவளையில் இருந்து கொழும்பு கொள்ளுப்பிட்டி பகத்தல வீதியில் உள்ள தனது வீட்டை நோக்கி பிக்கப் வாகனத்தில் வந்துள்ளார். எனினும், அவர் வீட்டுக்கு வந்து சேரவில்லை எனவும்,

காணாமல் போன வேளையில் இவரிடம் பல லட்சம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களும், பணமும் இருந்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிஸார் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர். (தி-60)

கடனறிந்து காலம் கருதி -இடனறிந்து
எண்ணி உரைப்பான் தலை.
-குறள்

# வலம்புரி

## அவதானம் வேண்டும்!

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் இலங்கைக் கடற்பரபபில் நடமாடியதாகவும், அதனைச் சுற்றிவளைக்க கடற்படையினர் முற்பட்ட போதிலும் கண்காணிப்புக் குழுவினரின் அசமந்தமும், அவர்களால் விடுதலைப் புலிகளுக்குத் தகவல் வழங்கப்பட்டதன் காரணமாகவும் ஆயுதக்கப்பல் தப்பிச்சென்றது, என்ற கடற்படைத் தளபதியின் அறிக்கை சமாதான முயற்சிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடற்படைத் தளபதியின் அறிக்கையோடு உஷாரடைந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சனைப் பதவியில் இருந்து விலக்குமாறு நோர்வேப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பியிருந்தார்.

ஓர் நாட்டின் ஜனாதிபதி அனுப்பிய கடிதத்திற்கு மதிப்பளித்து அக்கடிதத்தில் கூறப்பட்ட குற்றச்சாட்டுக் குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு நோர்வேப் பிரதமர் தனது வெளிநாட்டு அமைச்சருக்கு உத்தரவு பிறப்பித்துளளார்.

இந்நிலையில் கண்காணிப்புக் குழுத்தலைவரின் அறிவுறுத்தல்களைப் படையினர் கடைப்பிடிக்க வேண்டிய தேவையில்லையென ஜனாதிபதி படைத்தலைமைக்கு உத்தரவு பிறப்பத்துள்ளாரெனின், அவ் உத்தரவின் விளைவு சமாதான முயற்சியைக் குழப்புவதாக அமையுமென்பதில் இருவேறு கருத்திற்கிடமிலலை.

ஜனாதிபதி சுமத்திய குற்றச்சாட்டை விசாரிப்பதற்கு நோர்வேப் பிரதமர் முன்வந்த போதிலும், அதற்கு அவகாசமும் மதிப்பும் கொடுக்காமல் கண்காணிப்புக்குழுத் தலைவரின் அறிவுறுத்தல்களைப் படையினர் அனுசரித்துச் செல்ல வேண்டியதில்லையென்ற ஜனாதிபதியின் உத்தரவு அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் சீகுலைப்பதாக இருக்கும்.

கண்காணிப்புக்குழு என்பது இலங்கையை ஆககிரமிக்க வந்த ஓர் படையலல, இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பநதத்தை நடைமுறைப்படுத்தி, இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக வந்த ஓர் வெளிநாட்டு அனுசரணை அமைப்பு. அவர்கள் அரசும், விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கடைப்பிடிப்பதை உறுதிசெய்து அதன் மூலம் சமாதானத்திற்கானதோர் சூழ்நிலையை ஏற்படுத்தப்பாடுபடுபவர்கள்.

அரசும், விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டாலும் கணகாணிப்புக்குழு செயற்படாவிடில், புரிந்துணர்வு ஒப்பந்தம் எப்போதோ முடிவுக்கு வந்திருக்கும். இந்நிலையில் கண்காணிப்புக்குழுவின் அறிவுறுத்தல்களைப் படையினர் கடைப்பிடிக்க வேண்டியதில்லையென்ற ஜனாதிபதியின் உத்தரவு, பொதுமக்களை-தமிழ் மக்களை அவதானமாக இருக்குமாறு எச்சரித்துள்ளது.

# மறைந்தும் மறையாத நயினை மைந்தன் அமரர் பண்டித வித்துவான் சி.குமாரசாமி

**நயினை அன்னை ஈன்றெடுத்த புதல்வன் அமரர் பண்டித வித்துவான் சின்னத்தம்பி குமாரசாமி அவர்களைப் பற்றி கல்வி உலகம் நன்கறியும். எனினும் இன்றைய இளைஞர் பரம்பரை வித்துவானின் கல்விச்சேவைகள் பற்றித் தெரிந்து கொள்ளவும் அன்னாரின் கல்விச் சிந்தனைகளை முன்னெடுக்கும் நோக்கமாகவும் கொண்ட இக் கட்டுரை அவரின் 80 வது பிறந்த நாளை நினைவுகூரும் முகமாக வெளியிடப்படுகின்றது.**

(ஆ-ர்)

## வாழ்க்கை வரலாறு

### பிறப்பு

நாகமணியும் பரமர் பாகமுனு நாகஈஸ்வரியின் உறைவிடமாக அமைந்தது நயினையம்பதி. மணி பல்லவம் என்று சிறப்பித்துக் கூறப்படும் பெருமைமிக்க இப் பதியிலே நம்பினோருக்கு நாடியவரமளிக்கும்



நாகபூஷணியம்மன் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளாள். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவற்றால் விசேடம் பெற்ற இத்தலத்திலே அம்மன் அருளினால் அறிஞர்கள், ஆத்மீக வாதிகள், பாவலர்கள், தொண்டர்கள் பலர் தோன்றியுள்ளனர்.

இந் நயினையம்பதியில் வித்துவான் குமாரசாமி சின்னத்தமபி நாகமுத்து தம்பதியினருக்கு சிரேஷ்ட புத்திரனாக 1923ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி அவதரித்தார். வள்ளியம்மை, கதிரவேலு, இராசம்மா ஆகியோர் இவரின் உடன் பிறந்தோராவர். இவர் ஐந்து வயதிலேயே தந்தையை இழந்து தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தவர். தாயாரின் உறுதியான மனமும் ஊக்கமும், கேள்வி ஞானமும இவர்களின் ஆரம்பகால வளர்சசிக்கு உறுதுணையாக அமைந்தது. இவர்கள் சிறுபிளளையாக இருக்கும் பொழுதே தயார் மகாபாரதம், இராமாயணக் கதைகளைச் கூறுவார். விடுகதைகள், சிலேடைப் பாடல்கள் கூறுவார். இவையே இவர்கள் தமிழில் உயர்வுபெற்றுச் சிறந்து விளங்க வழிகோலியது.

### கல்வி

இவர் தனது கல்வியை நயினாதீவு நாகபூஷணி வித்தியாசாலையில் ஆரம்பித்து கனிஷ்ட தராதரம் வரை பயின்றார். பின்னர் திருநெல்வேலி சைவத்தமிழ்ப் பாடசாலையில் சிரேஷ்ட தராதரம்வரை பயின்று சிறந்த பெறுபேற்றைப் பெற்று பலராலும் போற்றப்பட்டார். பின்னர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் பயின்று அங்கும் தமது திறமையை வெளிப்படுத்தி அதிபரின் பாராட்டையும் பெற்றிருந்தார்.

### தொழில் வளம

ஆசிரியப் பயிற்சி முடிநது வெளியேறியதும் முதன்முதலில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் பதில் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1949 இல் நிரந்தர நியமனம் பெற்று கொழும்பு கிராண்ட்பாஸ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றினார். அதன்பின் மகாவத்த சிங்கள வித்தியாலயத்தில் இரண்டு வருடம் கடமையாற்றினார். இக்காலத்தில் தமிழ்ப்பிரிவுப் பாடசாலை ஒன்றை சிங்களப் பாடசாலையிலே உருவாக்கி பாலர்வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்புவரை தனித்துத் தானே கல்வியைத் திறம்படப் போதித்து சிங்கள அதிபரின் நன்றியையும் பாராட்டையும் பெற்றார்.

இக்காலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விதது வான் டிப்ளோமாப் பயிற்சி நெறியைத் தொடர்ந்து 1953 இல் வித்துவான் டிப்ளோமாப் பட்டத்தைப் பெற்றார். அதன்பின் முள்ளியவளை மகாவித்தியாலயத்திலும், நெல்லியடி மகாவித்தியாலயத்திலும் சேவையாற்றிப் பின் சொந்த மண்ணுக்கு வந்து தனது கடமையைச் செய்தார். நயினாதீவில் ஆசிரியப் பணி புரிந்தார். ஒருவருடம் பாட நூற் சபையில் பணியாற்றினார். அதன் பின்னர் வட்டுக்கோட்டையில் கடமையாற்றிப் பின் கோப்பாய் அரசினர் மகளிர் கலாசாலையில் 1971-1975வரை விரிவுரையாளராக விருந்து விவசாயத்தில் நாட்டம் கொண்டு வவுனியா மகாவித்தியாலயத்துக்கு உப அதிபராகக் கடமையாற்றினார். திரும்பவும் 1979 இல் கோபபாய் ஆசிரிய கலா சாலையில் விரிவுரையாளராகக் கடமை புரிந்து பின்னர் 1983இல் ஓய்வு பெற்றார்.

### இல்லறம்

இவர் நயினாதீவு சின்னத்தம்பி நாகம்மா தம்பதியினரின் மகள் ஆசிரியை கனகம்மாவை 1952இல் திருமணஞ்செய்து அதன் பேறாக டாக்டர் சிவகுமார் (அமெரிக்கா) கணக்காளர் சிவனேசன் (இலண்டன்) வத்சலா (கொழும்பு) டாக்டர் இளங்கோ (கண்டி) கௌசல்யா (சுவிஸ்), வாசுகி (லண்டன்), நந்தினி (கனடா) ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றார்.

### சேவைகள்

1983இல் ஓய்வுபெற்ற பின்னர் 1988-1992 வரை புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் தமிழ்த்துறையில் கடமையாற்றி உத்தமத் தமிழ் வித்தகப் பெருமகன் என விளங்கி கல்விப் பணிசெய்தார்.

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தனாதிகாரியாக நீண்டகாலம் பணியாற்றினார். தமிழ, சமஸ்கிருதம், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். சோதிடத்திலும் கணிதத்திலும் விற்பன்னர். நல்லூர்க்கம்பன் கழகத்தோடு இணைந்து வழக்காடு மன்றம், பட்டிமன்றம் மேன்முறையீட்டு நீதிமன்றம் போன்றவற்றில் பங்குபற்றி கம்பனது தமிழ்த் தொண்டை வளர்த்தெடுக்க உதவினார். பண்டித வகுப்புக்களை நடாத்தி தமிழ் வளர்ச்சிக்கு உரமிட்டார். பதவியில் ஓய்வுபெற்றாலும் தனது பணிகளில் ஓய்வு பெறாது இறுதி மூச்சு வரைக்கும் தமிழையும் சைவத்தையும வளர்க்க அரும்பாடு பட்டாா.

நயினை நாகபூசணியம்மன் ஆலய அறங்காவலராகவிருந்து ஆலய மேம்பாட்டுக்காக செயற்பட்டார். நயினை ப.நோ.கூ.சங்கம் அமைவுற உழைத்து நீண்டகாலம் அதன் செயலராக விளங்கினார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் சைவநற்சிந்தனை, ஞானக்களஞ்சியம், நடைமுறை வாழ்க்கைத் தத்துவம் போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபற்றி தனது திறமையை வெளிக கொணாந்தார். தேசிய கல்வி நிறுவனம் ஏற்பாடு செய்த கல்விச் சேவை விரிவுரை வகுப்புகளில் பங்குபற்றி விரிவுரையாற்றி ஆசிரியர்களைத் தன்பால் கவர வைத்தார். அவர்கள் இவரைக் கடத்திச் சென்று இவரின் அறிவுப் பொக்கிஷங்களைக் கவர வேண்டும் என்று கூறினார்களாம்.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி ஆகிய நூல்களுக்கு உரை எழுதி வெளியிட்டார். நவராத்திரி தோத்திரப் பாமாலை என்னும் நூலைத் தொகுத்து வெளியிட்டார். குழந்தைப் பாடல்கள இயற்றி வெளியிட்டார். குலேசர் சரிதம், அரிச்சந்திரன், இலக்கண நூல் ஆகியன எழுதி முற்றுப பெறும் நிலையில் திடீரென மாரடைப்பினால் காலமானார்.

## மறைந்தார் மாண்பு

வெள்ளை வேட்டி, வெள்ளை நஷனல் தான் அவரின உடை. வேகநடை, புன்னகை தவழும் முகம், கருணை பொழியும் கண்கள், கள்ளம் கபடம் அற்ற மனம், மன்னிக்கும் தன்மை இவரின் எளிமையான வாழ்வும் உயர்வான உலகியல் நோக்கும் மானுடத்தின் உயா விழுமியங்களின் கூட்டுருவாகத் தரிசனம் தந்தவர் எனலாம்.

நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனாய், பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்த் திகழ்ந்தவர்.

**சாகிற் தமிழ் படித்துச் சாகவேண்டும்- நம்**
**சாம்பல் தமிழ் கமழ்ந்து வேகவேண்டும்**

என்ற வாக்கிற்கமைய கடைசி நிமிடத்திலும் தமிழ்க் கட்டுரை எழுதிக்கொண்டிருந்த கையோடேயே அதையும் கொண்டுசென்ற செயற்பாட்டை எண்ணிப் பார்க்க முடியாது. இவரது ஆற்றெழுக்கன்ன அழகு தமிழ் ஆற்றலை எண்ணும்போது மையோ மறிகடலோ, மழைமுகிலோ ஐயோ இவன் அறிவென்பதோர் அழியா அழகே என்று கூறத்தோன்றும்.

வித்துவான் சிவபதமடைந்தவேளை நயினைக் கவிஞர் நா.க.சண்முகநாதபிள்ளை இயற்றிய அஞ்சலிப் பாமாலையில் சில செய்யுள்களை வாசக நேயர்களுக்காகத் தருகின்றேன்.

**இந்த மனிதனின் எத்தனம் எத்தனை**
**எடுத்துச் சொல்லுதல் இயலுமா அத்தனை**
**அந்த மாமனி தன்னையே வித்துவான்**
**என்ற குமார சாமியென் றேத்துவோம்**

**பணிதல் இன்சொல் பயத்தல் பண்பினைப்**
**பகிர்தல் பணத்தை வளத்தைப் பயனுறத்**
**துணிநல் துப்பார்க் குதவுதல் துன்பினைத்**
**துடைத்தல் துலங்குதல் இவர்தம் அணிகளாம்**

**நயினை எஸ்.சோமேஸ்வரபிள்ளை**
அதிபர்
ஆனைப்பந்தி மெ.மி.தமிழ் பாடசாலை


## சாயி அருளமுதம்



தினமும் நீங்கள் வேலை தொடங்குமுன் ஒரு சில நிமிடங்களுக்காவது கடவுளைத் தியானியுங்கள். நாள் முடியும் போது வேலை முடிந்தபின், கோவில் அல்லது பிரார்த்தனை மண்டபம் போன்ற ஒரு புனிதமான இடத்தில் ஒன்றுகூடி இறைவனின் நாமத்தைப் பாடி அவருடைய மகிமையைத் தியானித்து இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். அது உங்களை உண்மையான கர்மயோகி ஆக்கும். கர்ம வழியில் மாவீரர் ஆக்கவும் கூடும்.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை


# ஜனாதிபதிக்கு அழைப்பாணையா?

## மேல்நீதிமன்றம் பரிசீலனை

(கொழும்பு)

தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படாததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவில், பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஜனாதிபதியை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுப்பதா? இல்லையா? என்பதுபற்றி மேல்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலனை செய்யத் தீர்மானித்துள்ளது.

பொதுச்சட்ட உதவி நிலையம் தாக்கல்செய்த இம் மனுவில, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட 18 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கிருசாந் வெலிய முன, அரசியல் யாப்புக்கான 17வது திருத்தப் பிரேரணையின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழு அங்கத்தவர்களை சிபாரிசு செய்யும் கடப்பாடு ஜனாதிபதிக்கு உண்டென்றார்.

அரசியல் யாப்பு மன்றத்திற்கு அமைவாக ஜனாதிபதி நடக்கத் தவறும் பட்சத்தில், நீதிமன்றம் அதன் அதிகாரத்தை பயன்படுத்த முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இம் மனுத் தொடர்பான விசாரணை அடுத்த மாதம் 13ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(தி-60)

# ஐரோப்பிய நாடுகளுக்கான

## மற்றுமொரு கப்பல் சேவை

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கான மற்றுமொரு கப்பல் சேவை அடுத்த மாதம் 8ஆம் திகதிமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கையின் உற்பத்திப் பொருடகளை ஐரோப்பிய நாடுகளுக்கு எடுத்துச் செல்வதே இக்கப்பல் சேவையின் நோக்கம் ஆகும்.

அதேவேளை, சீனா, கொங்கொங், மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதிப் பொருட்களையும் இக்கப்பல் எடுத்துவரும்.

இக் கப்பல் சேவை கொழும்புத் துறைமுகத்தின் ஊடாக இடம்பெறும ஆறாவது கப்பல் சேவை என்பது குறிப்பிடத்தக்கது.

(பி-60)

## தமிழ்-சிங்கள கலைக்...

தில் இருந்து வெளியே வந்து தாக்குதலுக்குத் தயாராக இருந்த சிஹல உறுமயக் கட்சி ஆதரவாளர்களுக்கு சைகை காட்டினார்.இதனையடுத்து பொல்லுகள், தடிகள்,கொட்டன்கள், சைக்கிள் செயின் போன்ற ஆயுதங்களுடன் தாக்குதலுக்குத் தயாராக இருந்த சிஹல உறுமயக் கட்சி ஆதரவாளர்கள் அரங்கத்தை நோக்கிப் பாய்ந்து வந்தனர். அவ்வாறு பாய்ந்து வந்தவர்கள் அரங்கத்தின் மீது கற்களை வீசித் தாக்கினர்.

அங்கு கட்டப்பட்டிருந்த பதாதைகளை அறுத்தெறிந்து தீ மூட்டினர். அத்துடன் அரங்கத்திற்குள் நுழைந்து நிகழ்வில் கலந்து கொண்ட ஆர்வலர்கள் மீது தாக்குதல் நடத்த முயன்றனர்.

இதனையடுத்து நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினர் கலகக்காரர்களை உள்ளே நுழையவிடாது அவர்களுடன் போராடினர். இதனால் இரு பகுதியினருக்குமிடையே பெரும் வன்முறை வெடித்தது. இதில் பெண் ஒருவர் மற்றும் செய்தியாளர் உட்பட 6க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

உடனடியாக சம்பவம் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, அங்கு விரைந்து வந்த பொலிஸார் சிஹல உறுமயக் கட்சி அங்கத்தவர் ஒருவர் உட்பட 6 பேரைக் கைது செய்தனர். நகர சபை மண்டபத்தைச் சுற்றி பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். கலகம் அடக்கும் பொலிஸாரும், இராணுவத்தினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பொலிஸ் பாதுகாப்புடன் நிகழ்வு நடைபெற்ற போதும் மாலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை நடைபெற இருந்த நிகழ்வு இடை நிறுத்தப்பட்டது. இன்று இரண்டாம் நாள் நிகழ்வுகள் திட்டமிட்டபடி நடந்தே தீருமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர் எனினும் நகரசபையும் அதனை அண்டிய பகுதிகளிலும் பெரும் அச்சமும் பதற்றமான சூழ் நிலையும் காணப்படுகின்றது.

நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் பொலிஸ் பாதுகாப்புடனேயே வீடுகளுக்கு அனுப்பிவைக்க பட்டுள்ளனர்.

குடாநாட்டில் இருந்து கலந்து கொண்ட படைப்பாளிகள் எவரும் சம்பவத்தில் பாதிப்புக்குள்ளாகவில்லை. மேற்படி தாக்குதல் சம்பவத்திற்கு 'திவயின' சிங்கள நாளிதளே தூபமிட்டதாக பொலிஸ் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 'விடுதலைப் புலிகள் பொங்கு தமிழ் நிகழ்வை கொழும்பில் நடத்துவதற்கு தயாராகியுள்ளனர். இதனை முன்னிட்டு புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கொழும்புக்கு வருகை தந்துள்ளனர். என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இதுவே நேற்று அசம்பாவிதம் இடம் பெறக்காரணம் என சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதேவேளை இன்றைய நிகழ்வில பேராசிரியர் கா.சிவத்தம்பி சிறப்புரையாற்றவிருக்கிறார்.

குடாநாட்டில் இருந்து யாழ்.பல்கலைக் கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் கலாநிதி என். சண்முகலிங்கன் எழுத்தாளர்களான க.குணராசா,யோகநாதன், ஜேசுராசா, சட்டநாதன் உட்பட படைப்பாளிகள் பலரும் நேற்றைய நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர். (த)

### கண்காணிப்புக்குழுத்...

யையடுத்து நோர்வேப் பிரதமர் இது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்குமாறு தனது வெளிவிவகார அமைச்சருக்கு பணிப்பு விடுத்திருந்தார்.

இதனையடுத்து நோர்வே வெளிவிவகார அமைச்சின் அழைப்பை ஏற்று கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சன் நேற்று நோர்வேக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இது இவ்வாறு இருக்க யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரைப் பதவி நீக்கம் செய்து அவரை நாட்டை விட்டு வெளியேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜே.வி.பி. ஜனாதிபதியைக் கோரியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கண்காணிப்புக் குழுத் தலைவர் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணையை மேற்கொள்ளவதற்கு பாதுகாப்பு அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளது டன் அது தொடர்பான அறிக்கை ஒன்றையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் வழங்கவுள்ளார். (வ)

## ஜே.வி.பிக்கு தமிழர்களின்...

தமிழ்- சிங்கள உறவில் ஒற்றுமையின்றி பிரிவு நிலை மேலோங்கியிருந்தது. இதற்கு எமது உடன்பாடு சிறிதளவும் இல்லை. நாட்டை ஆட்சி செய்த முதலாளித்துவ வர்க்கத்தினராகிய ஆட்சியாளர்களே. இத்தகைய பிரிவு நிலையை உருவாக்கினர். ஆனால் இன்று இடம் பெறுகின்ற சிங்கள- தமிழ் கலைக் கூட நிகழ்வு எம்மையெல்லாம் ஒன்றிணைத் திருப்பதனால் இது வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நிகழ்வாக அமைகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டபோது அதற்காக நான் கடுமையாக உழைத்தவன். அங்கு கடமையாற்றிய முதல் சிங்களப் பேராசிரியன் என்ற வகையில் இங்கு இன்றைய நிகழ்வில் பேசுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

கடந்த 25 ஆண்டுகளாகத் தமிழ் மக்களுக்கு எதிரான ஓரங்கட்டல்கள் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. ஆனால் அதற்கு எதிராக இன்று நான் குரல் கொடுத்து வருவதுடன், அது தொடர்பாகப் பல்வேறு வகையிலும் வெளிப்படுத்தல்களை மேற்கொள்கிறேன்.

1983-ம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அப்போது தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டுமென தென்பகுதி எங்கும் துண்டுப் பிரசுரம் வெளியிட்டு விநியோகித்தேன்.

அது மாத்திரமல்ல தமிழ் மக்களின் சொத்தான யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டது. இப்படி எத்தனை எத்தனையோ வகையான-மோசமான நிலைமைகள் ஏற்பட்டன.

ஆனால் அந் நிலமைகள் பற்றி ஆழமானதொரு பார்வையில் சிங்கள் மொழியில் படைப்பு உருவாகாதது மனவேதனைக்குரியதாகும்.

ஜே.வி.பி தாய்நாட்டைக்காக்க போராடிவருவதாகக் கூறிவருகிறது ஆனால் இன்று தமிழ் இரத்தம் தேவை என்ற இனவாதப் போக்கிலேயே தனது செயற்பாட்டை அது மேற்கொண்டு வருகிறது. ஜே.வி.பியின் இவ்வாறான செயற்பாட்டால் நாடு அழிவுப்பதையை நோக்கியே செல்கிறது.

ஸ்ரீலங்கா சுகந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் கூட்டிணைவது பற்றி ஆராயப்பட்ட போது ஜே.வி.பி தனக்குப் பாதுகாப்பு அமைச்சு, கல்வி அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் தரப்பட வேண்டுமென்று வலியுறுத்தியது.

ஏன் அவ்வாறு வலியுறுத்தியது என்று சிந்திப்போமானால் தமிழ் சிங்கள இளைஞர்களைக் கொலை செய்யவே பாதுகாப்பு அமைச்சைக் கோரியது தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களைப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விதைக்கவே கல்வியமைச்சைக் கோரினார்.

குணதாஸ் அமரசேகர என்ற சிங்கள எழுத்தாளர் இனவாதத்தை தூண்டும் வகையிலேயே படைப்புக்களை உருவாக்கி வருகிறார் அவர் இன்று ஜே.வி.பியுடன் இணைந்து செயற்படுகிறார்.

இலங்கைத் தீவில் ஆரம்பத்தில் தமிழ்-சிங்கள-முஸ்லிம் சகோதரர்கள சகோதர உணர்வுடன் ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்தனர்.

சிங்கள அரிச்சுவடி தமிழ் அரிச்சுவடியில் இருந்தே வளர்ச்சி பெற்றது எனவே சிங்கள-தமிழ் உறவு நீடித்து நிலைக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை என்றும் பேராசிரியர் சுசரித ஹம்லத் கூறினார் (த)

## போராளிக்கு பிணை அனுமதி

(திருநெல்வேலி)

கரவெட்டி வதிரியில் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் கடற்புலி உறுப்பினர் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் எதிரி அவரை அடையாளம் காட்டாதையடுத்து அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவ்வழக்கு எதிர்வரும் 10ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ந-43)

## ஆசிரியர்களுக்கு செயலமர்வு

(தனங்கிளப்பு)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கான செயலமர்வு வறணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தரம்1,2ல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும், நாளையும், தரம் 3,4,5ல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 3ம்,4ம் திகதிகளிலும் நடைபெறவுள்ளது. இதில் குறித்த ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொளளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார். (ந-37)

### உள்வரும்...

யிலிருந்து அது கட்டாயம் அமுல் செய்யப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தொலைத் தொடர்பு சீராக்கல் ஆணைக்குழு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. இத் தீர்மானம் அமுலான பின்னர் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்கள் நன்மையடைவார்கள் என அமைச்சர் இம்தியாஸ் கூறியுள்ளார். (ந-5)

## யாழ் நீதிமன்றில் ஆஜராகுமாறு சுன்னாகம் மின்சாரசபை பொறுப்பதிகாரிக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் தலைமைக்காரியாலய பொறுப்பதிகாரியை எதிர் வரும் 12ந் திகதி யாழ் நீதிமன்றில் ஆஜராகுமாறு யாழ்.மாவட்ட நீதிவான் இ.த விக்னராஜா அழைப்பாணை விடுத்துள்ளார்.

சட்ட விரோதமாக மின்பாவனை செய்தார்கள் என்ற பெயரில் இலங்கை மின்சார சபையால் செய்யப்பட்ட மனுத்தாக்கலின் பேரில் மூவர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கடந்த சித்திரை மாதம் வழக்கின் எதிரிகளான மூவரும் தமது வீட்டிற்கு .மின் இணைப்பு வழங்குமாறு மின்சார சபையிடம் விண்ணப்பித்திருந்தாகவும் எனினும் தமக்கு பின் விண்ணப்பித்தோருக்கு மின்சாரம் வழங்கப்பட்டபோதும் தமக்கு அதுவரையும் மின்சாரம் வழங்கவில்லை எனவும்.

இதனால் தவிர்க்க முடியாத சூழ்நிலையால் இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாக அவர்கள் தமது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்தே மின்சாரசபைப் பொறுப்பதிகாரியை ஆஜராகுமாறு நீதிவான் அழைப்பணை விடுத்துள்ளார்.

இதேவேளை இம் மூவரினதும் விண்ணப்பத்திற்கு அமைவாக உடனடியாகவே மின் இணைப்பினை வழங்க வேண்டுமெனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ந-4)

## திருமலையில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை முள்ளிப் பொத்தானைப் பகுதியில் நேற்றுப் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்டது.

நேற்று அதிகாலை இனந் தெரியாத நபர்களினால் மூன்று பேர் வாள் வெட்டிற்கு இலக்கானதைக் கண்டித்தே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன் காரணமாக போக்குவரத்துக்கள் தடைப்பட்டதுடன் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களும் முற்றாக செயலிழந்துள்ன.

வாள் வெட்டிற்கு இலக்கான மூவரும் கந்தளாய் மருத்தவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (தி-61)

## கற்பிட்டி மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டம்

(மன்னார்)

கற்பிட்டி மீனவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டமும் அதனைத் தொடர்ந்து சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டமும் இடம்பெற்று வருகின்றது.

கற்பிட்டிக் கடலில் லைலா வலை மூலம் மீன்பிடித்த ஏழு மீனவர்கள் மீன்பிடி அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்களை விடுவிக்குமாறு கோரியும் லைலா வலை மூலம் மீன் பிடிக்க அனுமதிக்குமாறுமே இப் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

கற்பிட்டிப் பிரதேச சபைக்கு முன்னால் உண்ணாவிரதம் இருந்து வரும் மீனவர்களுக்கு பொலிஸார் பாதுகாப்பு அளித்து வருகின்றனர். (தி-61)

## பெண்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

முறைசாராத தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பான கருத்தரங்கொன்று சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்ததில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

நாளைக்காலை 10 மணிக்கு மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இன் நிகழ்வில் நுவரேலியா கண்டி, வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்த பெண்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந)

## வீரமணி ஐயருக்கு நினைவஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மஹாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயரின் திருவுருவப் படத்திரைநீக்கமும், நினைவஞ்சலிக் கூட்டமும் இவ்வார இறுதிக்குள் நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளதென ஏற்பாட்டாளர் குணராசா அறிவித்துள்ளார். (த)

## துவிச்சக்கர வண்டிகளை ஒப்படைக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை மாம்பழம் சந்தியில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற முச்சக்கர வண்டி மற்றும் இராணுவ பவல் வாகன விபத்தைத் தொடந்து அப்பகுதியில் ஏற்பட்ட களேபரத்தையடுத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை எதிர்வரும் 10ம் திகதிக்கு முன் நீதி மன்றில் ஒப்படைக்குமாறு யாழ் நீதிமன்ற நீதிவான் இ.த விக்னராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். இதேவேளை இச்சம்பவத்தின் போது தமது துவிச்சக்கர வண்டிகளைத் தவறவிட்டோர் எதிர்வரும் 10ந்திகதி நீதிமன்றத்திற்கு சமுகமளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ந-4)


யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்
நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் 2003

காலம் : 01.11.2003 சனிக்கிழமை மு.ப 9 : 00மணி
இடம் : கல்லூரி அரங்கம்
தலைவர் : திரு க.சிவாஜி (அதிபர்) அவர்கள்

ஆசியுரை
அன்னை துர்க்கா துரந்தரி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
(தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
பிரதம விருந்தினர்
கலாநிதி அ.சக்திவேல் அவர்கள்
(B.V.Sc(Cey), Dip. Agric.Eco Reading U.K)
நிறுவுநர் நினைவுப் பேருரை
திரு சி.செல்லையா அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், சங்கானைக் கோட்டம்)
பரிசில் வழங்கல்
திருமதி கமலேஸ்வரி சக்திவேல் அவர்கள்
நிறைவுரை
திரு சி.மகேந்திரன் அவர்கள்
(பகுதித் தலைவர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
விழாவிற்குச் சமுகமளித்து சிறப்பிக்கும்படி தங்களை அன்புடன் அழைக்கின்றோம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்
(C/6775)



இரகுநாதையர்
வாக்கிய பஞ்சாங்கக் கலண்டர்
விற்பனையாகிறது
விலை ரூபா 70 மட்டுமே
கிடைக்குமிடம்
சோதிட விலாச புத்தகசாலை
46, பெரியகடை,
யாழ்ப்பாணம்.



ஹற்றன் நஷனல் வங்கி
யாழ்ப்பாணம்
அடகுப் பொருட்களை மீட்டல் / விற்பனைக்கான அறிவித்தல்
எமது கிளையில் அடகுச் சேவை வசதி பெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு

நீங்கள் பெற்றுள்ள அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிக்கப்பட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஒரு வருட காலத்துக்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்பட வேண்டும் என்பதை மீண்டும் அறியத் தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்த முடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் செலுத்தி கடனின் காலாவதித் திகதியினை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு வருட காலத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருட்களை மீட்க/ காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுப் பொருட்கள் ஏலத்தில் விற்பனைக்கு இடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்

முகாமையாளர்
(C/6774)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.